பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 28 வெள்ளிக்கிழமை 13.11.2020 கதிர் 08

இனி இது ரகசியம் அல்ல!

'இளகின இரும்பைக் கண்டால் கொல்லன் ஓங்கி, ஓங்கி அடிப்பானாம்' – என்பது பழமொழி.

நமது யாழ்ப்பாண அரச அதிகாரி ஒருவரின் செயலைப் பார்க்கும் போது எனக்கு இந்தப் பழமொழிதான் நினைவுக்கு வருகின்றது.

பக்கம் 02

# இலங்கையில் கொரோனா தாண்டவம்! ஒரு வாரத்தில் மாத்திரம் 24 பேர் காவு!!

மொத்தச் சாவு 48ஆக அதிகரிப்பு
நேற்றும் 373 பேருக்குத் தொற்று

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் கடந்த ஒரு வாரத்தில் மாத்திரம் 24 பேர் பலியாகியுள்ளனர்.

இதன்படி கடந்த 5ஆம் திகதி ஐந்து பேரும், 6ஆம் திகதி ஒருவரும், 7ஆம் திகதி நான்கு பேரும், 8ஆம் திகதி இரண்டு பேரும், 9ஆம் திகதி இரண்டு பேரும், 10ஆம் திகதி மூன்று பேரும், 11ஆம் திகதி ஐந்து பேரும், 12ஆம் திகதி (நேற்று) இரண்டு பேரும் என மொத்தம் 24 பேர் பலியாகியுள்ளனர்.

இவர்களில் 16 ஆண்களும், 8 பெண்களும் உள்ளடங்கு கின்றனர். இவர்களில் 12 பேர் (6 ஆண்கள், 6 பெண்கள்) 60 வயதைக் கடந்தவர்கள்.

பக்கம் 02



# பயணத் தடைகளைத் தன்பாட்டில் இராணுவத் தளபதி விதிக்கலாமா?

## யார் அதிகாரம் கொடுத்தார்கள் என நாடாளுமன்றில் சுமந்திரன் கேள்வி

கொழும்பு, நவம்பர் 13

"இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, கடந்த புதன்கிழமை இரவு திடீரென ஓர் அறிவிப்பை விடுக்கின்றார். *'மேல் மாகாணத்தில் உள்ள எவரும் மேல் மாகாணத்தை விட்டு வெளியேற முடியாது என்ற உத்தரவு உடனடியாக அமுலுக்கு வருகிறது. எதிர்வரும் 15ஆம் திகதி வரையில் இந்த உத்தரவு நடைமுறையில் இருக்கும்'* என்று அரச கட்டளை ஒன்றைப் பிறப்பித்துள்ளார். எந்தச் சட்டத்தின் பிரகாரம் இராணுவத் தளபதி இந்தக் கட்டளையைப் பிறப்பித்துள்ளார்? இவ்வாறான கட்டளைகளைப் பிறப்பிப்பதற்கான சட்ட அங்கீகாரம் இராணுவத் தளபதிக்கு இருக்கின்றதா?"

– இவ்வாறு அரசிடம் கேள்வி எழுப்பினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

பக்கம் 02



## 'ட்ரோன்' மூலம் 15 பேர் சிக்கினர்

கொழும்பில் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் சட்ட விதிகளை மீறி நடமாடும் நபர்களைக் கண்காணிக்க

பக்கம் 02

## 4 சீனப் பிரஜைகளுக்குக் 'கொரோனா' தமிழ்ப் பிழையுடன் தூதரகம் அறிக்கை

கொழும்பு, கொட்டாஞ்சேனைப் பகுதியில் நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுவந்த 4 சீனப் பிரஜைகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனக் கொழும்பில் உள்ள சீனத்தூதரகம் அறிவித்துள்ளது.

தூதரகம் இது குறித்த அறிக்கை ஒன்றை தமது உத்தியோகபூர்வ ருவிட்டர்பக்கத்தில் பதிவிட்டுள்ளது.

பக்கம் 02

## சர்வதேசக் கடன் பொறிக்குள் விரைவில் சிக்கும் இலங்கை

நாடாளுமன்றில் சம்பிக்க எச்சரிக்கை



அரசு சர்வதேச கடன்களைச் சமாளிக்க அமெரிக்காவிடமிருந்து ஒரு பில்லியன் டொலர்களையும், சீனாவிடமிருந்து ஒரு பில்லியன் டொலர்களையும் பெற்றுக்கொள்ளவுள்ளது. இவ்வாறான குறுகிய கால கடன்களால் வெகுவிரைவில்

பக்கம் 02

## தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒன்றிணைவால் கவிழ்ந்தது சு.க. வசமிருந்த செட்டிகுளம் சபை

வரவு – செலவுத் திட்டம் தோல்வி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆளுகைக்குட்பட்ட வவுனியா, செட்டிகுளம் பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் நின்று இரு மேலதிக வாக்குகளினால் தோற்கடித்துள்ளன.

செட்டிகுளம் பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு – 05, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி – 04, தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ். – 03, ஐக்கிய

பக்கம் 11

## வவுனியா வடக்கு பிரதேச சபை பட்ஜட் இரகசிய வாக்கெடுப்பில் நிறைவேற்றம்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வவுனியா வடக்கு பிரதேச சபையின் வரவு – செலவுத்திட்டம் ஒரு மேலதிக வாக்கால் நிறைவேற்றப்பட்டது.

வவுனியா வடக்கு பிரதேச சபையில் தமிழ், சிங்கள உறுப்பினர்களை உள்ளடக்கி 25 உறுப்பினர்கள் உள்ள நிலையில் இன்று 4 சிங்கள உறுப்பினர்கள் சபைக்கு சமுகமளிக்காத நிலையில் வரவு – செலவுத்திட்டம் முன்வைக்கப்பட்டது.

இதன்போது தமிழ்த் தேசிய மக்கள்

பக்கம் 02

## 15,723 பேருக்கு தொற்று 10,653 பேர் குணமடைவு

கொழும்பு, நவ. 13

நாட்டில் மேலும் 92 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்பில் இருந்தவர்களுக்கே இவ்வாறு வைரஸ்

பக்கம் 02




வவுனியா வடக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

## மன்னார் அரச அதிபராக அன்னம்மா!

(ந.லோகதயாளன்)



மன்னார் மாவட்ட அரச அதிபராக திருமதி அன்னம்மா ஸ்ரான்லி டி மெல் நேற்று முதல் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின்

பக்கம் 02

## ஜனாஸாக்கள் அடக்கம்: நல்ல முடிவு கிடைக்கும்

ஹக்கீம் நம்பிக்கை

கொரோனா வைரஸால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்வது குறித்து அரசு நல்ல முடிவை எடுக்கும் என நம்பிக்கை கொண்டுள்ளோம்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின்

பக்கம் 11

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று நமது சுகாதாரப் பிரிவுக்கு திடீர் உார் பிறந்துவிட்டது போலும். கொரோனாத் தொற்றுத் தடுப்பு நடவடிக்கைகளை அதிஉச்ச நிலையில் அவர்கள் முன்னெடுத்தமை கண்டு யாழ்ப்பாணம் பூரித்துத்தான் போயிருக்கும்.

யாழ்ப்பாணத்தில் நேற்று திருமண நாள், திருமணக் கூட்ட நிகழ்வுகளைக் கலைத்துக் கலைத்து முறியடிப்பதில் நமது சுகாதார அதிகாரிகள் நேற்று பிஸி.

என்ன,ஏது என்று விசாரித்துப் பார்த்ததில் – நமது சுகாதாரத்துறைக்கு திடீர் குஷி பிறந்ததில் – பின்னணி நமது யாழ் அரச அதிபர்தான் என்பது தெரியவந்தது.

யாழ்ப்பாணம் நகரின் பிரபல விடுதிகள் மூன்றில் நேற்றையதினம் திருமணம் இடம்பெறுவதாக மாவட்டச் செயலகத்திற்குத் தொலைபேசி மூலம் தகவல் வழங்கப்பட்டதாம்.

கொரோனாத் தடுப்புத் தொடர்பான சுகாதார விதிகள் முழு அளவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதில் முற்றிலும் கண்ணும் கருத்துமான யாழ் அரச அதிபர், உடனடியாக சுகாதார அதிகாரிகளின் கவனத்துக்கு விரைந்து – விழுந்தடித்து – கொண்டு வந்தாராம்.

அரச அதிபரின் உத்தியோகபூர்வ அறிவித்தலை அடுத்து சுகாதார அதிகாரிகள் சும்மா இருக்க முடியாதல்லவா? அந்தத் திருமண மண்டபங்களை அதிரடியாகச் சோதனைக்கு உட்படுத்தினர்.

ஒரு திருமண மண்டபத்தில் திருமணத்துக்கான தயார்ப்படுத்தல்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அதனால் திருமணத்தை நிறுத்தி, வீட்டில் 'ஸிம்பிள்' ஆக அதை நடத்தி முடிக்கும் படி அறிவுறுத்தப்பட்டது.

மற்றைய திருமணத்தில் சுகாதாரக் குழுவினர், சிவபூசையில் கரடி போல அதிரடியாகப் புகுந்த போது திருமணம் முடிந்து மணமக்களும், விருந்தினர்களும் அங்கு இருந்தனர். இதில் வேடிக்கை என்னவென்றால் கொரோனாப் பரவல் குறித்தும் பொது நிகழ்வுகளில் மக்கள் கூட்டம் கூடுவதைத் தவிர்க்குமாறும் ஆலோசனை கூற வேண்டிய மருத்துவர்தான் மாப்பிள்ளை. மணப்பெண் லண்டனில் இருந்து வந்திருந்தார். அவர்களின் பெயர் விவரமும், திருமணத்துக்கு சமுகமளித்தோர் விவரங்களும் சுகாதார அதிகாரிகளினால் பெறப்பட்டன. திருமணம் நடந்த ஹோட்டல் பூட்டப்பட்டது.

திருமணத் தம்பதியரின் பெயர்களைப் பதிந்துள்ள சுகாதார துறையினர் அவர்களுக்கு இன்று தனிமைப்படுத்தல் உத்தரவு பிறப்பிப்பர் என்று ஒரு தகவல் தெரிவித்தது. அப்படி என்றால் வீட்டில் தனிமைப்படுத்தலில்தான் அவர்களின் தேன்நிலவு கழியும் போல.

மூன்றாவது மண்டபத்துக்கு சுகாதாரக் குழு சென்றடைந்தபோது திருமணம் நடந்த இடத்தில் யாரும் இல்லை. தகவல் கிடைத்து எல்லோரும் நேரத்துடன் 'எஸ்கேப்' ஆகியிருப்பர் போலும். ஆனால், நேற்று அங்கு திருமணமே நடக்கவில்லை என்று மண்டப நிர்வாகம் தெரிவித்ததாம்.

நம்ப மறுத்த சுகாதார அதிகாரிகள் அயலில் உள்ள சி.சி.ரி.வி. கமராக்களின் பதிவுகளை நாடியிருப்பதாகவும் தகவல்.

இனி விடயத்துக்கு வருவோம்.

சுமார் இருநூறு பேர் கூடும் கலியாண மண்டப நிகழ்வுக்குள் 'வெண்கலப்பானைக் கடைக்குள் யானை புகுந்தால் போல' நுழைந்து கொரோனாப் பரவல் தடுப்பு நடவடிக்கையை மிகக் கவனமாக நடைமுறைப்படுத்தி, 'கருமமே கண்ணாயினர்' போல கடமையே கண்ணாகிய சுகாதாரத்துறைக்கு, கொழும்பில் இருந்து வந்து, குறுகிய மண்டபம் ஒன்றுக்குள் சுமார் இருநூற்றியைம்பதுக்கும் அதிகமானோர் கூடி அமர்க்களம் பண்ணியமை தெரியவில்லையோ...?

அதுவும் ஒரு நாள் இல்லை. ஒன்றை விட்டு ஒரு நாளாக இரண்டு நாள்கள் நடந்ததே. அப்போது அதற்குள் இந்த சுகாதாரப் படை ஏன் புகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை....? அது எஃகு போன்ற இரும்பு, நம்மவர்களின் இந்தக் கல்யாணங்கள் இளகின இரும்பு போன்றவை என்பதாலா?

இந்தக் கேள்வியை பல ஊடகங்களும், பல தரப்பினரும் பல தடவைகள் கேட்டு விட்டனர். ஆனால் ஓர் அதிகாரியாவது வாய் திறந்து தெளிவான பதில் – விளக்கம் – தரவில்லை.

அதில், முக்கிய விடயம் என்னவென்றால், நேற்றுக் கலியாண விடயங்களை சுகாதாரத் துறையினருக்கு விலாவாரியாக வழங்கியவர் அரசு அதிபர்தான். அவர்தான் அப்படி அமைச்சர் பட்டாளங்களையும், அதிகாரிகளையும் கூட்டி ஆர்ப்பாட்டமாக கூட்டங்களை இங்கு யாழில் இரண்டு தடவைகள் நடத்தியவர்.

இன்னொரு கொசுறுத் தகவலும் உண்டு. மக்கள் ஒன்று கூடுவதைத் தவிர்க்க வேண்டும், கலியாணத்துக்கு இத்தனை பேர், செத்த வீட்டுக்கு இத்தனை பேர் மட்டும்தான் என்று கட்டாயப்படுத்தல் அறிவிப்புகளை விடுத்த யாழ் செயலக அதிகாரிகள், அந்த அறிவிப்பு விடுத்த அன்று மாலையே யாழ்.ஹோட்டல் ஒன்றில் தமக்குள் ஒரு பெரிய பட்டாளத்துடன் விருந்துடன் கூட்டம் போட்டார்கள் என்று ஒரு செய்தி வெளியாகியதல்லவா? நேற்று அரச அதிபர் கொடுத்த தகவலின் பேரில் சுகாதார அதிகாரிகளினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, திருமணம் நடத்தியமைக்காக மூடப்பட்ட ஹோட்டலில்தான் அதிகாரிகள் அந்தப் பிரியாவிடைக் கொண்டாட்டத்தை அன்று நடத்தியிருந்தார்கள்.

இனி, என்ன? எல்லாம் மகேசன் செயல் என்று கடவுள் மீது பாரத்தைப் போட்டு விட்டு நாம் பார்த்திருக்க வேண்டியதுதான்.

– மின்னல் –

## பயணத் தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று பிரதமரும் நிதி அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷவால் சமர்ப்பிக்கப்பட்ட 2020ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டமூல விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தற்போதைய அரசு முன்வைத்துள்ள 2020ஆண்டுக்கான ஒதுக்கீடு, சட்ட அங்கீகாரம் பெற்ற ஒன்றல்ல. அரசமைப்பின் 148ஆம் சரத்தில் பொது நிதி முழுமையாக நாடாளுமன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது எனத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இந்த விடயங்களில் நாடாளுமன்ற அனுமதி இல்லாது எந்த நிறுவனத்தின் நிதியையும் கையாள முடியாது. இதில் அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவு அல்லது அரச சேவையுடன் நேரடியாகத் தொடர்புபட்ட விடயங்களுக்கு மாத்திரமே நிதியை நாடாளுமன்ற அங்கீகாரம் இல்லாது கையாள முடியும் என்ற மாற்று சரத்தும் உள்ளது. அது தவிர்ந்து வேறு எந்தவொரு விடயத்துக்கும் அரச நிதி கையாளப்பட முடியாது.

இவ்வாறு சரத்துக்கள் உள்ள நிலையில் இரண்டு தடவைகள் நாடாளுமன்ற அனுமதி இல்லாது ஜனாதிபதியால் பொது நிதி கையாளப்பட்டுள்ளது. எனவே, இன்று (நேற்று) சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2020ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் சட்ட ரீதியற்றது. எனவே, இந்த விவாதமும் சட்ட அங்கீகாரம் இல்லாத ஒன்றே என்பதால் எம்மால் இதனை அங்கீகரிக்க முடியாது

இதேவேளை, புதன்கிழமை (நேற்று முன்தினம்) இரவு இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, *'உடனடியாக அமுலுக்கு வரும் விதத்தில் மேல் மாகணத்தில் உள்ள எவரும் மேல் மாகாணத்தை விட்டு வெளியேற முடியாது,* எதிர்வரும் 15ஆம் திகதி வரையில் இந்த உத்தரவு நடைமுறையில் இருக்கும்' என்று அரச கட்டளை ஒன்றைப் பிறப்பித்துள்ளார். எந்தச் சட்டத்தின் பிரகாரம் இராணுவத் தளபதி இந்தக் கட்டளையைப் பிறப்பித்துள்ளார்? இவ்வாறான கட்டளைகளைப் பிறப்பிப்பதற்கான சட்ட அங்கீகாரம் இராணுவத் தளபதிக்கு இருக்கின்றதா? இதனை இங்குள்ள அரச தரப்பினர் யாரினாலாவது தெளிவுபடுத்த முடியுமா?

இது அரசர் ஒருவர் தான் விரும்பியவாறு பொதுமக்களுக்குக் கட்டளை பிறப்பிப்பது போன்றுள்ளது. இராணுவத் தளபதியால் சட்டத்துக்கு முரணாகவே இந்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமல்ல, தனிமைப்படுத்தல் ஊரடங்கு என்ற ஒன்றை இன்று நாட்டில் பிறப்பித்துள்ளனர். இதுவும். கூட சட்டத்துக்கு முரணானது. 123 ஆண்டுகள் பழமையான சட்டத்தைப் பயன்படுத்தியே இப்போது இந்த உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளனர். இது கொலரா நோய் ஏற்பட்ட காலத்தில் பயன்படுத்தப்பட்ட சட்டம். எனவே, இந்தச் சட்டங்களில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டியது அவசியம்.

இதேபோன்றே சட்டத்துக்குப் புறம்பான இன்னுமொரு விடயமும் உள்ளது. அதாவது சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேவை கருதி மாத்திரம் நாடாளுமன்றத்துக்கு வர முடியும் என்ற சட்டம் உள்ளது. இவ்வாறான நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) எவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டார்? அவரால் எவ்வாறு கட்டடத் திறப்பு விழாவுக்குச் செல்ல முடிந்தது? எந்தச் சட்டத்தின் அடிப்படையில் அவருக்கு இந்த அனுமதிகள் வழங்கப்பட்டன என்பதற்கு விளக்கமளிக்க முடியுமா?

இவ்வாறான விடயங்களைப் பார்க்கின்றபோது இந்த அரசு சகல நடவடிக்கைகளையும் சட்டத்துக்கு முரணாகவே செய்து வருகின்றது என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது – என்றார்.

## 4 சீனப் பிரஜை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறு தொற்றுக்கு இலக்காகிய 4 சீனப் பிரஜைகளும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் தூதரகத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இவர்களுக்கு உள்ளூரில்தான் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருக்கும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சீனத்தூதரகம் வெளியிட்ட தமிழ் மொழிபெயர்ப்பு அறிக்கையில் பல்வேறு தமிழ் சொற்பிழைகளும் காணப்படுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருமதி அன்னம்மா ஸ்ரான்லி டி மெல், 1989இல் பட்டதாரி ஆசிரியராக இணைந்து, 1995 இல் இலங்கை நிர்வாக சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டு கமநல சேவைகள் உதவி ஆணையாளர், பிரதேச செயலாளர், மேலதிக அரச அதிபர், மலைநாட்டு அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர் ஆகிய பதவிகளை வகித்தவர்.

தற்போது அவர் வடக்கு மாகாணத்தின் பிரதி பிரதம செயலாளர் (ஆளணி அபிவிருத்தியும் பயிற்சியும்) பதவியில் இருந்தார்.

அரச துறையில் 31 வருடங்கள் சேவையாற்றிய அவர், நேற்றிலிருந்து மன்னார் மாவட்ட அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## 15, 723 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொற்றியுள்ளது. நேற்று இதுவரையில் 369 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேவேளை, மொத்த தொற்றாளர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்து 723 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவால் இதுவரையில் 48 பேர் உயிரிழந்துள்ளனர். 10 ஆயிரத்து 653 பேர் குணமடைந்துள்ளனர்.

## வவுனியா வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முண்ணனியின் உறுப்பினர் ஒருவரால் வரவு – செலவுத் திட்டத்தில் குறைகள் இருப்பதால் ஏற்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் வரவு – செலவுத்திட்டத்தை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தார்கள். இதையடுத்து தவிசாளர் ரி.தணிகாசலம் வரவு – செலவுத்திட்டம் மீது வாக்கெடுப்பு நடத்தினார்.

தமிழ்த் தேசிய மக்கள் முண்ணனி உறுப்பினர் ஒருவர் இரகசிய வாக்கெடுப்பு தேவை எனத் தெரிவித்த நிலையில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி உறுப்பினர் ஒருவரும் இரகசிய வாக்கெடுப்பு தேவை என வலியுறுத்தினார்.

எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் பகிரங்க வாக்கெடுப்பைக் கோரினார்கள்.

இதையடுத்து வாக்களிப்பைப் பகிரங்கமாக நடத்துவதா? இரகசியமாக நடத்துவதா? என வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது 11 பேர் இரகசிய வாக்கெடுப்புக்கும், 8 பேர் பகிரங்க வாக்கெடுப்புக்கும் வாக்களித்தனர். இதனாக் இரகசிய வாக்கெடுப்பு நடத்தத் தவிசாளரால் தீர்மானிக்கப்பட்டது.

இந்தநிலையில், வரவு – செலவுத்திட்டம் இரகசிய வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது 21 வாக்குகள் அளிக்கப்பட்டன. 11 வாக்குகள் ஆதரவாகவும், 10 வாக்குகள் எதிராகவும் அளிக்கப்பட்டமையால் வரவு – செலவுத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## 'ட்ரோன்' மூலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

'ட்ரோன்' கமரா பயன்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு முகத்துவாரத்தில் ட்ரோன் உதவியதால் 15 பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் விதிமுறைகளை மீறி செயற்பட்டவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சர்வதேசக் கடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடே கடன் பொறிக்குள் சிக்கவுள்ளது.

– இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க.

நாடாளுமன்றத்தில் நேற்று, 2020 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

நாட்டின் சகல துறைகளும் இன்று வீழ்ச்சி கண்டுள்ளன. சுற்றுலாத்துறை முழுமையாக வீழ்ச்சி கண்டுள்ளது. ஆனால், நாடு மீட்கப்பட்டுள்ளது என அரசு கூறுகின்றது.

இந்தநிலையில், சர்வதேச முதலீடுகளைக் கூறி ஏமாற்றுகின்றனர். சர்வதேச தரவுகளுக்கு அமைய எமக்கு கடன் வழங்கும் நிறுவனங்கள் எம்மைத் தரப்படுத்தலில் கீழ் நோக்கி கொண்டு சென்றுள்ளனர். எனவே, நாட்டில் பொய்யான தரவுகளைக் கூறி சார்வதேச முதலீடுகளைப் பெற்றுக்கொள்ள முடியாது.

நாட்டின் கடன் நெருக்கடி மோசமான நிலையில் தலைதூக்கிக்கொண்டுள்ளது. கையிருப்பு 5.8 வீதத்துக்கு வீழ்ச்சி கண்டுள்ளது.

நாம் உருவாக்கிய திட்டத்தில்தான் இந்த அரசும் கடன்களைச் செலுத்தியது. ஆனால், தாமாக புதிய வேலைத்திட்டங்களை உருவாக்கியுள்ளதாக இந்த அரசு பொய்களை கூறுகின்றது.

இன்று அரசு குறுகியகால கடன்களைப் பெற்று நிலைமைகளைச் சமாளிக்கின்றது. இந்தியாவிடமிருந்து 400 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்த அரசு பெற்றுக்கொண்டது. இப்போது அமெரிக்காவிடம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுக்கொள்ளும் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு விரைவில் அந்தக் கடன்களையும் பெற்றுக்கொள்ளவுள்ளது.

அதேபோல் சீனாவிடம் இருந்து ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றுக்கொள்ளவுள்ளது. இவ்வாறான குறுகிய கால கடன்களினால் அடுத்த ஆண்டு இறுதிக்குள் மீண்டும் மோசமான கடன் நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமையே உருவாகும் – என்றார்.

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கையில் கொரோனாவால் இதுவரை மொத்தமாக 48 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இலங்கையில் நேற்றும் 373 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 723 ஆக அதிகரித்துள்ளது.

தொற்றாளர்களில் 5 ஆயிரத்து 22 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 10 ஆயிரத்து 653 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# தொழில் முனைவோருக்குக் காணிகள் பகிர்ந்தளிப்புத் திட்டம் தமிழ் மக்கள் சுதாகரிக்காவிட்டால் நிலம் பறிபோகும் அபாயம்!

## எச்சரிக்கின்றார் ஐங்கரநேசன்



இளம் தொழில் முனைவோர்களுக்கு ஒரு லட்சம் காணித் துண்டுகளைப் பகிர்ந்தளிக்கும் திட்டம் ஒன்றைக் காணி முகாமைத்துவ அலுவல்கள் இராஜாங்க அமைச்சு முன்னெடுத்துள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் குறைவாகவே கிடைக்கப் பெற்ற நிலையில் விண்ணப்ப முடிவுத் திகதி நொவம்பர் 15ஆம் திகதி எனக் காலநீடிப்புச் செய்யப்பட்டுள்ளது. இதே போன்று, மகாவலி அதிகார சபையும் கைத்தொழில் முதலீட்டுச் செயற்திட்டத்துக்கு மகாவலிக் காணிகளை நீண்டகாலக் குத்தகைக்கு வழங்குவதெனத் தீர்மானித்து டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு அறிவித்துள்ளது.

இவற்றுக்கு எல்லாம் சிகரம் வைத்ததுபோல ஜனாதிபதியும் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகள் தவிர்ந்த ஏனைய வனப்பிரதேசங்கள் அபிவிருத்திக்கு உட்படுத்தப்படவுள்ளன என்று அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இவை நாடு அபிவிருத்திப் பாய்ச்சல் ஒன்றுக்குத் தயாராகின்றது என்பது போலத் தோற்றம் காட்டினாலும் சிங்களக் குடியேற்றம் ஒன்றுக்கான முன்னேற்பாடாகவே இவற்றைக் கருத வேண்டியுள்ளது. தமிழ்த்தரப்பு சுதாகரிக்காதுவிடின் எஞ்சியுள்ள நிலமும் பறிபோகும் அபாயம் உள்ளது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இளம் தொழில் முனைவோருக்கு ஒரு லட்சம் காணித் துண்டுகள் வழங்கும் திட்டம் குறித்து பொ. ஐங்கரநேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ள தொழில் முனைவோருக்குக் காணித் துண்டுகள் வழங்கும் செயற்திட்டம் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளத் தக்கதும் வரவேற்கத்தக்கதுமான ஒரு நிலச் சீர்திருத்தச் செயற்பாடு ஆகும்.

ஆனால், நடைமுறையில் கடந்த காலங்களில் அரசாங்கங்கள் மேற்கொண்ட காணிப் பங்கீடுகள் யாவும் அபிவிருத்தி என்ற பெயரில் இடம்பெற்ற சிங்களக் குடியேற்றத்திட்டங்களே ஆகும்.

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற கல்லோயாத் திட்டம், அல்லை கந்தளாய்த் திட்டம், மகாவலி அபிவிருத்தித் திட்டங்கள் ஊடாக அரசாங்கம் அங்கு சிங்களக் குடியேற்றங்களை நிறுவி தமிழ் – சிங்கள மக்களின் இன விகிதாசாரத்தையே மாற்றி அமைத்துள்ளது. வடக்குக்கு மகாவலியிலிருந்து ஒரு துளி நீர் தன்னும் இதுவரை கிடைக்காத நிலையிலும் மகாவலி அதிகாரசபை முல்லைத் தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான பெருந்தொகை வயற் காணிகளை மணலாற்றில் வலிந்து குடியேற்றியிருக்கும் சிங்கள மக்களுக்கு வழங்கியுள்ளது.


வடக்கில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் சர்வதேச நாடுகளின் அழுத்தம் காரணமாக இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட காணிகளில் ஒரு பகுதி விடுவிக்கப்பட்டாலும், அரசாங்கம் சூழல் பாதுகாப்பு என்ற பெயரில் பச்சை யுத்தம் ஒன்றைத் தொடுத்துப் பாரியளவு நிலப்பரப்பைப் பறித்து வைத்துள்ளது. காடுபேண் கட்டளைச் சட்டத்தின் கீழ் கிளிநொச்சி, முல்லைத் தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் 5 லட்சம் ஏக்கர்கள் புதிய ஒதுக்குக் காடுகளாகவும், மன்னார் மாவட்டத்தில் ஒரு லட்சம் ஏக்கர்கள் புதிய பேணாற் காடுகளாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

வன உயிரிகள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் நாகர் கோவில், நெடுந்தீவு சரணாலயங்களும், மன்னார் மாவட்டத்தில் மடு வீதி சரணாலயங்களும் சுற்றயற் பிரதேசங்கள் உள்வாங்கப்பட்டு ஏறத்தாழ இரண்டே முக்கால் லட்சம் ஏக்கர்கள் அளவில் தேசியப் பூங்காக்களாக விஸ்தரிக்கப்பட்டுள்ளன. இவை யாவற்றினுள்ளும் தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த குடியிருப்புப் பகுதிகளும் வயற்காணிகளும் அடங்கியுள்ளன.

மகாவலி அதிகார சபை, வனவளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் போன்றவற்றால் அரசாங்கம் பறித்த தங்கள் பூர்வீக நிலங்களை மீளத்தருமாறு கோரிப் பொது மக்கள் போராட்டங்களை நிகழ்த்திவரும் நிலையிலேயே அரசாங்கம் தொழில் முயற்சியின் பெயரால் காணிகளைப் பகிர்ந்தளிக்கும் திட்டத்தை முன்மொழிந்துள்ளது. இத்திட்டத்தில் தமிழ் மக்கள் தங்களை இணைத்துக் கொள்ளாவிடின் அரசாங்கம் மறைமுகமாக முன்னெடுக்க விருக்கும் நிகழ்ச்சி நிரலை வெளிப்படையாகவே முன்னெடுக்கும் நிலை தோன்றிவிடும். இதனைக் கருத்திற் கொண்டு, எங்களது நிலம் பறிபோகாதிருக்க அரசாங்கம் அறிவித்துள்ள காணித்துண்டங்களுக்கு எம்மவர்கள் விண்ணப்பிக்க வேண்டும். இவ் விண்ணப்பங்களின் பரிசீலனையின்போது தமிழ் மக்கள் கடந்த காலங்களைப் போன்று பேரினவாதத்தின் இனமூழ்கடிப்புக்கு ஆளாகாது இருப்பதை தமிழ்மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் எப்பாடுபட்டாயினும் உறுதி செய்தாக வேண்டும்.– என்றும் தெரிவித்துள்ளார்.

# இம்முறை வீடுகளில் இருந்தவாறு தீபாவளியைக் கொண்டாடுங்கள்!

## நீதியரசர் விக்கியும் கோரிக்கை



இம்முறை தீபாவளியை உங்கள் உங்கள் வீடுகளில் இருந்தவாறு கொண்டாடுங்கள் என்று யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனும் கோரியுள்ளார். இது தொடர்பாக அவர் நேற்று 'அன்பான எம் உறவுகளிடம் ஒரு வேண்டுகோள்' என்ற தலைப்பில் விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

இம்முறை தீபாவளியை உங்கள் உங்கள் வீடுகளில் இருந்தவாறு கொண்டாடுங்கள். மக்கள் பெருவாரியாகக் கூடுவதை நாங்கள் கட்டாயம் தவிர்க்க வேண்டும்.

வயது முதிர்ந்தவர்கள், சலரோகம், உயர் குருதி அழுத்தம் போன்ற நோய்களுடன் வாழ்பவர்கள் மற்றும் கர்ப்பவதிகளுக்கு கொரோனா நோயானது பாரிய ஆபத்தினை விளைவித்து வருகின்றது.

ஒவ்வொருவரது வீடுகளிலும் வாழும் மேற்படி ஆபத்துக்கு உள்ளாகக் கூடிய உறவினர்கள், நண்பர்களது உயிர்களைப் பாதுகாக்க வேண்டுமானால் அவர்களுக்கு கொரொனாத் தொற்றாது பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

எனவே வரவுள்ள தீபாவளி தினத்தில் சுற்றத்தார், உறவுகள், நண்பர்கள் ஆகியோரின் வீடுகளுக்கு செல்லுதல், புதிய உடுபுடவைகள் வாங்குதல், ஆபரணங்கள் வாங்குதல் மற்றும் வழிபாட்டுதலங்களுக்குக் கூட்டமாகச் செல்லுதல் ஆகிய வழக்கங்களைத் தவிர்த்தல் நலம் என்று நாம் கருதுகின்றோம்.

ஏனெனில் அவ்வாறு கருமங்களுக்குச் செல்லும் போது கொரொனாத் தொற்றிற்கு ஆளாக நேரிடலாம். கொரோனாத் தொற்று எம்மிடையே பரவத் தொடங்கிவிட்டால் பாரிய அசௌகரியங்களுக்கு நாம் உறவுமுகம் கொடுக்க வேண்டிவரும்.

இம்முறை தீபாவளியை வீடுகளில் இருந்தவாறு கொண்டாடுவதன் மூலம் ஒவ்வொருவரும் தங்களினதும் தங்களது இரத்த உறவுகள் மற்றும் நண்பர்களினதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அபாயகரமான சூழலில் கொண்டாட்டங்களை மட்டுப்படுத்துவதில் தவறு ஏதும் இல்லை என்பதே எமது கருத்து.

வெறும் ஒரு அரசியல்வாதிக்கு ஏன் இந்தக் கரிசனை என்று எம்முள் சிலருக்கு ஆத்திரம் கூட வரலாம். ஆனால் சமூக நலனில் ஈடுபாடுள்ளவனே அரசியல்வாதி. வரமுன் காக்கும் நோக்குடன் இந்த அரசியல்வாதி செயற்படுகின்றார். அவ்வளவுதான்.

# 14 லட்சத்துக்கு அதிகமான குடும்பத்துக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு உள்ளது

நாட்டில் இதுவரையான காலப்பகுதிக்குள் 14 இலட்சத்து 9 ஆயிரத்து 578 குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல்திணைக்களம் அறிவித்துள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட காலப்பகுதிக்குள் தமது வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கு நிவாரணத்தை வழங்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், இது வரையில் கொடுப்பனவுகள் வழங்கப்படாத குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா பணத்தை வழங்கும் நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேநேரம், ஒக்ரோபர் மாதத்திலும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியிலும் தமது வீடுகளில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கான 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் அடங்கிய நிவாரண பொதிகளை வழங்கும் வேலைத்திட்டமும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா விதிமுறைகளை பின்பற்றாத 21 பேர் 24 மணி நேரத்துக்குள் கைது!



முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்காக நேற்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் 21 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் 29 ஆம் திகதி இது தொடர்பான குற்றச்சாட்டின் கீழ் மொத்தம் 158 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் சுகாதார உத்தரவுகளை அமுல்படுத்துவதற்காக நாடு முழுவதும் சிவில் உடையில் பொலிஸார் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆகவே தனிமைப்படுத்தல் சுகாதார உத்தரவுகளை மீறும் நபர்கள் எவரும் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவார்கள்.

குற்றவாளிகள் எனக் கருதப்படும் சந்தேக நபர்களுக்கு 10 ஆயிரம் ரூபா அபராதமும் ஆறு மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்படும் என்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன சுட்டிக் காட்டியுள்ளார்.

# மேல்மாகாணத்தை விட்டு சட்டவிரோதமாக வெளியேறுவோருக்கு பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, நவ.13

மேல் மாகாணத்தை விட்டு வெளியேற தடை விதிக்கப்பட்ட போதிலும் சட்டவிரோதமாக வெளியேறி ஏனைய மாவட்டங்களுக்குச் செல்லும் நபர்கள் தொடர்பில் தகவல்களை சேகரிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் அவர்களை சுய தனிமைப்படுத்தலுக்கு அனுப்புமாறு பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி இந்தத் தடை அமுலில் இருக்கும் காலகட்டத்தில் ஒருவர் மேல் மாகாணத்தில் இருந்து இன்னொரு பிரதேசத்துக்குள் பிரவேசித்தால், அவர் 15 நாள்களுக்கு பின்னரே அங்கிருந்து வெளியேற முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## காணிகள் நமக்குள் பகிர்வதை உறுதிப்படுத்த முயற்சிப்போம்!

இலங்கைத் தீவில் தமிழர்களின் தேசிய இன இருப்புக்கான அடித் தளங்களை – அத்திவாரங்களை – தேடித் தேடி அழிப்பதன் மூலம், இத்தீவில் அவர்களின் தாயகம் மீதான உரிமைக் கோரிக்கையை சிதைத்து விடலாம் என்று எண்ணுகின்றது பௌத்த, சிங்களப் பேரினவாதம்.

பிரிட்டனிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்றதாக அறிவிக்கப்பட்டமை முதல் காலங்காலமாகப் பதவிக்கு வந்த பௌத்த, சிங்களப் பேரினவாத அரசுகள் அதனைத்தான் திட்டமிட்ட முறையில் ஒப்பேற்றி வந்தன என்பதை இப்பத்தியில் பல தடவைகள் – அடிக்கடி – தொடர்ந்து – சுட்டிக்காட்டி வருகின்றோம்.

தமிழ்த் தேசிய இனத்தின் வாழ்வுக்கும் இருப்புக்கும் அடித்தளமாக அமையும் பல்வேறு விடயங்களில் முக்கியமானது அவர்களின் பூர்வீக வாழிட உரிமை.

தமிழர்களின் பாரம்பரிய நிலங்கள் மீதான சொத்துரிமையை இழக்க வைத்து, அவற்றை இந்தத் தீவின் பெரும்பான்மை இனமான பௌத்த, சிங்களம் கபளீகரம் பண்ணி ஆக்கிரமிப்பதற்கு வழி செய்தால், தமிழர் தாயகமும் அதன் மூலம் தமிழ்த் தேசியமும் சிதைந்து அழிந்து விடும் எனத் திட்டமிட்டுக் கணக்கிட்டது சிங்களம்.

தொடர்ந்து ஆட்சிப் பீடம் ஏறிய சிங்கள அரசுகள் வெகு முனைப்பாகவும், தீவிரமாகவும், கனகச்சிதமாகத் திட்டமிட்டும் இதனை ஒப்பேற்றி வருகின்றன என்பது திண்ணம்.

தமிழ் மக்களை அவர்களுடைய தாயக பூமியிலேயே சிறுபான்மையினராக்கி, சனத்தொகை விகிதாசாரத்தை சிதைப்பதற்காகவே இந்த திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் முழு அளவில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழர்களின் தாயகமான கிழக்கை கபளீகரம் செய்யவும், பின்னர் வடக்கையும் கிழக்கையும் பிரித்துத் துண்டாடவும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்ற நகர்வுகள் பெருத்த எடுப்பில் முன்னெடுக்கப்பட்டன.

ஆரம்பத்தில் கல்ஓயா, மாதுறு ஓயா என்று தொடங்கி அல்லை, கந்தளாய் என்று தொடர்ந்து, நாயாறு தாண்டி, இப்போது முல்லைத்தீவின் பெரும் பகுதி கபளீகரம் செய்யப்படும் விதத்தில் பாரிய திட்டங்கள் கட்டவிழ்கின்றன.

அநுராதபுரத்தையும் தாண்டிப் பரவியிருந்த தமிழர் பரம்பல் இப்போது வவுனியா வடக்கு வரை குறுகிவிட்டது. வவுனியா தெற்கை முழுமையாகச் சிங்கள மயப்படுத்தியாகிவிட்டது.

மக்களுக்குக் காணிகளைப் பகிர்ந்தளித்தல் என்ற அறிவிப்போடு கோட்டா அரசின் மூன்று தரப்புகள் ஆரம்பித்திருக்கும் திட்டமும் கூட இப்படித் தமிழர் தாயகத்தை சிங்களமயப்படுத்தும் சூறையாடல் நடவடிக்கையின் அங்கங்களே என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியிருக்கின்றமை அவதானிக்கத்தக்கது.

* இளம் தொழில் முனைவோருக்காக ஒரு லட்சம் காணித்துண்டுகளை பகிர்ந்தளிக்கும் திட்டம் ஒன்றை காணி முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு முன்னெடுத்துள்ளது.

* மகாவலி அதிகார சபையும் கைத்தொழில் முதலீட்டுச் செயற்றிட்டத்துக்கு மகாவலிக் காணிகளை நீண்ட காலக் குத்தகைக்கு வழங்கப் போவதாக அறிவித்துள்ளது.

* போதாக்குறைக்கு பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகள் தவிர்ந்த ஏனைய வனப் பிரதேசங்கள் அபிவிருத்திக்கு உட்படுத்தப்படவுள்ளன என்று அறிவித்துள்ளார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. அந்த அபிவிருத்திக்காக அங்கும் வனப் பிரதேசக் காணிகள் பகிர்ந்தளிக்கப்படும் என்பது எதிர்பார்க்கத் தக்கதே.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் கூறுகின்றமை போல இந்த விடயங்கள், நாடு ஓர் அபிவிருத்திப் பாய்ச்சலை ஒன்றுக்குத் தயராவாது போல தோற்றம் காட்டினாலும், சிங்களக் குடியேற்றம் ஒன்றுக்கான – அல்லது தமிழர்களின் தாயகத்தை கபளீகரம் செய்யும் ஓர் அடுத்த கட்ட ஆக்கிரமிப்புத் திட்டத்துக்கான – கட்டியமாகவே கருதவேண்டியுள்ளது.

திரியாயிலும், தென்னைமரவாடியிலும் காலம் காலமாகத் தமிழர்களின் பூர்வீகக் காணிகளாக அறுதி, உறுதிகளோடு இருப்பவற்றையே வர்த்தமானி அறிவித்தல் மூலம், அடாத்தாகப் பிடுங்கி பௌத்த விகாரைகளுக்குத் தானம் செய்ய நடவடிக்கைகளை எடுத்த அரசு, மேற்படி மூன்று காணிப் பங்கீட்டுத் திட்டங்கள் மூலமும் என்ன சூத்திரத்தை கட்டவிழ்க்கின்றது என்பது அப்படி ஒன்றும் ஊகிக்கப் பெரிய விடயமேயல்ல.

தொழில் முயற்சி மற்றும் விடயங்களின் பெயரால் காணிகளைப் பகிர்ந்தளிக்கும் இத்திட்டத்தில் தமிழ் மக்களாகிய நாங்கள் எங்களை முழு முனைப்புடன் இணைத்துக் கொள்ளத் தவறுவோமேயானால் ஐங்கரநேசன் சுட்டிக்காட்டுகின்றமை போல அரசாங்கம் இது விடயத்தில் முன்னெடுக்கவிருக்கும் மறைமுகமான அரசியல் நிகழ்ச்சித் திட்டத்துக்கு நாமே உதவியளித்து, ஊக்குவிப்பாளர்களாக இருந்து விடுவோம்.

இதை மக்களுக்குப் புரிய வைத்து, இந்த விடயத்தில் எமது மக்களை முழுமையாக ஈடுபடச் செய்து, தமிழர் தாயகக் காணிகள் தமிழர்களின் கைகளை விட்டுப் போகவிடாமல் தடுத்து, அவை எமக்குள்ளேயே பகிரப்படுவதை உறுதி செய்யும் விதத்திலான விழிப்புணர்வை நம் மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதில் ஊடகத் தரப்புக்களான நாங்களும், தேசியம் பேசி வாக்குகளைச் சுருட்ட முனையும் நமது அரசியல்வாதிகளும் பொறுப்பாகச் செயற்படாமல் தவறிழைத்து வருகின்றோம் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

## தற்கொலைக்கு ஒப்பானது 20 ஆவது திருத்தச் சட்டம்!

### என்கிறார் கரு ஜயசூரிய



கொரோனா வைரஸ் தொற்றுப்பரவலுக்கு எதிரான போராட்டத்தில் அரசாங்கத்துடன் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து நின்றார்கள்.

அதனூடாக வைரஸ் பரவல் ஓரளவு கட்டுப்பாட்டிற்குள் வந்தபோது, மக்களின் ஒற்றுமையைப் பலிகொடுத்தேனும் அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றிக்கொள்வதே அரசாங்கத்தின் தேவையாக இருந்தது. 20 ஆவது திருத்தம் ஒரு தற்கொலை முயற்சிக்கு ஒப்பானது என்பதையே மீண்டும் சுட்டிக்காட்டுகிறோம் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பில் அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் மேற்கொண்ட பதிவில் மேலும் கூறியிருப்பவை வருமாறு –

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலுக்கு எதிரான போராட்டத்தில் அரசாங்கத்துடன் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து நின்றார்கள்.

அதனூடாக வைரஸ் பரவல் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்தபோது, மக்களின் ஒற்றுமையைப் பலிகொடுத்தேனும் அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றிக்கொள்வதே அரசாங்கத்தின் தேவையாக இருந்தது.

ஆனால் தற்போதுவரை குறைந்தபட்சம் பொருள்களின் விலைகளிலேனும் மட்டுப்பாட்டைப் பேணுவதற்கு அரசாங்கம் தவறியிருக்கிறது.

நாங்கள் மீண்டும் கூறுகின்றோம். அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தம் என்பது உண்மையில் ஒரு தற்கொலை முயற்சி.

மேலும் தற்போது கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டிருப்பது முக்கிய மைல்கல்லாகும்.

அந்தத் தடுப்பு மருந்து அனைவருக்கும் கிடைக்கக்கூடியதாக இருப்பதை உலகத் தலைவர்கள், சர்வதேசக் கட்டமைப்புக்கள் ஒன்றிணைந்து உறுதிப்படுத்துவது அவசியமாகும்.

இதுவே மனிதாபிமானத்துக்கு ஏற்படக் கூடிய மிகப்பெரும் சவாலாக இருக்கும் .– என்று குறிப்பிட்டிருக்கிறார்.

## ரேபிட் ஆன்டிஜென் சோதனைக்கான கருவிகள் நாடு வந்து சேர்ந்தன!



தென்கொரியா நன்கொடையாக வழங்கிய 30 ஆயிரம் ரேபிட் ஆன்டிஜென் சோதனை கருவிகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நாட்டை வந்தடைந்துள்ளன.

30 ஆயிரம் ரேபிட் ஆன்டிஜென் சோதனை கருவிகளும் 11 பெரிய பொதிகளில் அடைக்கப்பட்ட நிலையில் இலங்கை ஏயர்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான யுஎல் – 471 என்ற விமானத்தின் மூலம் தென்கொரியாவிலிருந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

## வங்கிக் கணக்கில் ஓய்வூதியம் வைப்பு!

### களுத்துறை மாவட்டத்தில்

களுத்துறை, நவ.13

களுத்துறை மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறும் 47 ஆயிரம் பேருக்கான கொடுப்பனவுகள் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன எனவும் இந்தக் கொடுப்பனவு அடுத்த வாரம் முதல் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட செயலாளர் பிரசன்ன கினிகே தெரிவித்துள்ளார்.

களுத்துறை மாவட்டத்தில் கொவிட் – 19 நெருக்கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 5 ஆயிரம் ரூபா உதவித் தொகையை பகிர்ந்தளிக்க 131 கோடி ரூபா அரசாங்கத்துக்குக் கிடைத்திருப்பதாகவும் பிரசன்ன கினிகே தெரிவித்துள்ளார்.

இந்த மாவட்டத்தில் 2 லட்சத்து 63 ஆயிரம் குடும்பங்களுக்கு உதவித் தொகை வழங்கப்படவுள்ளது. தனிமைப்படுத்தப்பட்டுள்ள 5 ஆயிரத்து 295 குடும்பங்கள் மத்தியில் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகளும் வழங்கப்படவுள்ளன என்றும் களுத்துறை மாவட்ட செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தியவன்னை ஏரியில் மூழ்கி இளைஞன் ஒருவர் மாயம்!

கொழும்பு, நவ.13

தியவண்ண ஏரியில் மூழ்கி 26 வயதுடைய இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

தியவண்ண ஏரியில் கடந்த செவ்வாய் இரவு மீன்பிடி படகொன்றும் பிறிதொரு படகொன்றும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இதன்போது படகிலிருந்த ஒருவர் நீந்தி கரைசேர்ந்தமையுடன், மற்றையவர் நீரில் மூழ்கி காணாமல்போயுள்ளார்.

இந்நிலையில் காணாமல்போன இளைஞரைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2020
‘கூர்மையாகச் செவிமடுத்துக் கொண்டிருக்கும் விண்ணுடன் பேசுவதற்கான மண்ணின் இடையறாத முயற்சிகளே மரங்கள்.’
- இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)

# பிள்ளையானைத் தப்ப வைக்க ராஜபக்ஷக்கள் கூட்டு முயற்சி!

## கஜேந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தை படுகொலை செய்தவரை அபிவிருத்திக்குழு தலைவராக நியமித்ததன் மூலமாக அக்குற்றச் சாட்டிலிருந்து பிள்ளையானை தப்ப வைப்பதற்கு கோட்டபாய ராஜபக்ஷவும், மஹிந்த ராஜபக்ஷவும் கூட்டாக முயற்சிக்கிறார்கள் என்ற சந்தேகமே எங்களுக்கு ஏற்படுகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

கடந்த 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25 ஆம்திகதி அதிகாலை கிறிஸ்மஸ் திருப்பலி ஒப்புக்கொடுக்கின்ற நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜேசப்பரராஜசிங்கம் கலந்து கொண்டிருந்த போது பிள்ளையான் குழு என்கின்ற துணை இராணுவ குழுவினால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார். அதில் பலர் படுகாயமும் அடைந்திருந்தார்கள். அச்சம்பவத்துடன் தொடர்புபட்ட துணை இராணுவக்குழு உறுப்பினரான பிள்ளையான் கைது செய்யப்பட்டுதடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இவ்வாறான நிலையிலே கடந்த நாடாளுமன்ற தேர்தலிலே பிள்ளையான் வெற்றி பெற்றார் என அறிவிக்கப்பட்டார். இந்நிலையிலே தற்போது அரசாங்கத்தினால் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார். அரசாங்கத்தின் இந்தச் செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம். மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தென் தமிழீழத்திலே சிறந்த அறிஞரும், சிறந்த ஜனநாயகவாதியும்,



மனித உரிமைவாதியும், தமிழ்த் தேசியப் பிரச்சினையிலே உறுதியுடன் உழைத்தவருமான ஜோசப் பரராஜசிங்கத்தை படுகொலை செய்தவரை அரசாங்கம் அபிவிருத்திக்குழு தலைவராக நியமித்துள்ளது. இதன் மூலமாக அக்குற்றச்சாட்டிலிருந்து பிள்ளையானைத் தப்ப வைப்பதற்கு கோட்டபாய ராஜயபக்ஷவும், மஹிந்த ராஜபக்ஷவும் கூட்டாக முயற்சிக்கிறார்கள் என்ற சந்தேகமே எங்களுக்கு ஏற்படுகின்றது.

20 ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலைமையிலே, ஒரு சர்வாதிகார போக்கிலே தாங்கள் தொடர்ந்து செல்லப்போகின்றார்கள் என்பதனை எடுத்துக்காட்டும் விதமாகவே இச்செயல் அமைந்திருக்கின்றது.

தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகிய நான் அனைத்து மாவட்டங்களிலும் இடம்பெறுகின்ற ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்களிலும் கலந்து கொள்ள முடியும். அவ்வாறு கலந்து கொள்வதற்கான கடிதங்களை எங்களுக்கு அனுப்பி வைக்குமாறு அரசாங்க அதிபர்களை கோருகின்ற போது அவர்கள் எங்களிடம் ஜனாதிபதி செயலகத்துடன் பேசுமாறு தெரிவிக்கின்றனர்.

தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் எனக்கு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான உரிமை இருக்கின்றது என்ற வகையில் வடக்கு, கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களில் நடைபெறும் ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான அனுமதியினைக் கோரி ஜனாதிபதி செயலகத்திற்கு ஒரு கோரிக்கை கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளேன். இவ்வாறு எனது கோரிக்கை கடிதம் அனுப்பி வைக்கப்பட்டு மூன்று வாரங்கள் கடந்த நிலையிலும் அதற்கான பதில் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. யாழ்ப்பாணத்திலே ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இவ்வாறான சூழ்நிலையிலே அரசினால் பிள்ளையான் இவ்வாறு நியமிக்கப்பட்டிருப்பதானது படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர்களைப் பாதுகாக்கின்ற முயற்சியாகத்தான் பார்க்கின்றோம்.

இச்செயற்பாடானது ஜனநாயத்தையும் மனித உரிமையையும் குழி தோண்டி புதைத்து, படுகொலையாளிகள் எதிர்காலத்திலும் இவ்வாறான படுகொலையைச் செய்தாலும் அரசாங்கத்திற்குத் துணையாக இருந்தால் தாங்கள் பாதுகாக்கப்படுவோம் என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்க கூடிய வகையிலேயே அமைந்திருக்கின்றது.

எங்களுடைய உரிமை போராட்டத்தில் போராடினார்கள், விடுதலைப் போராட்டத்துடன் சம்பந்தப்பட்டார்கள் என்பதற்காகவும் பெரும் எண்ணிக்கையானோர் எந்தவித சம்பந்தமும் இல்லாமல் பொய்க் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலே கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பது வடக்கு – கிழக்குத் தமிழர்களின் நிலைப்பாடாகவும், தென்னிலங்கையில் வாழ்கின்ற தமிழர்களின் நிலைப்பாடகவும் புலம்பெயர் தமிழர்களின் நிலைப்பாடாகவும் உள்ளது. அனைத்து அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே உலக தமிழர்களும் உள்ளனர்.

இதேவேளை ஆனந்த சுதாகரனை விடுதலை செய்வோம் என்று வாக்குறுதி வழங்கிவிட்டும் அவர் விடுதலை செய்யப்படவில்லை.

இலங்கையில் இருக்கின்ற பயங்கரவாத சட்டம் ஒரு கொடுரமான சட்டம், அது நீக்கப்பட வேண்டும் என ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் 2015 ஆம் ஆண்டு தெளிவாக கூறியிருக்கிறார். அது ஒரு பிழையான சட்டம் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

அவ்வாறான ஒரு பிழையான சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று உலகத்தமிழினமே கூறுகின்ற போது அவர்களைத் தொடர்ந்து தடுத்து வைத்து அவர்களுடைய எதிர்காலத்தை அழித்துக்கொண்டு, மறுபுறம் தமிழ் சமூகத்தில் இருக்க கூடிய – தமிழர்களுக்காக குரல் கொடுக்க கூடிய – நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தை படுகொலை செய்த குற்றச்சாட்டோடு சம்பந்தப்பட்டவரை இந்த அரசாங்கம் விடுவித்திருப்பது என்பது இந்த அரசாங்கத்தின் அநியாயத்திற்கு துணை போகின்றவர்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்ற செய்தியைதான் சொல்கின்றது. – எனத் தெரிவித்தார்.

## நிக்கவரெட்டிய பகுதியில் பலத்த காற்றுடன் மழை!

*நிக்கவரெட்டிய பகுதியில் நேற்றுமுன்தினம் பெய்த கடும் மழையுடன் கூடிய காற்றுடனான கால நிலையால் சுமார் 200 வீடுகள் சேதமடைந்துள்ளன என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.*

*எனினும் பலத்த காற்றுடனான சீரற்ற வானிலையால் உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

## 2020 வெளிநாட்டுக் கடன்களை செலுத்தியது அரசு எனத் தகவல்



2020ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு கடன்களை இலங்கை அரசாங்கம் செலுத்திவிட்டது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

2020 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்ட மூலத்தை நேற்று (வியாழக்கிழமை) நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடும் கடன் நெருக்கடியில் உள்ளது என்றஎண்ணத்தைஏற்படுத்துவதற்கு எதிர்க்கட்சியினர் முயற் சிகளை மேற்கொள்கின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் தற்போதைய நிர்வாகம்கடன்விவகாரத்தை சிறப்பாக கையாண்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

2020 முதல் இலங்கை 4 ஆயிரத்து 200 கோடி அமெரிக்க டொலர்களை வெளிநாட்டு கடனாகச் செலுத்த வேண்டியிருந்தது. எனினும் 2020 இற்கான கடன்களைசெலுத்திவிட்டோம் எனஅவர் தெரிவித்துள்ளார்.

வலுவான பொருளாதாரத் திட்டங்களை முன்னெடுத்ததன் காரணமாகவே இதனை செய்ய முடிந்தது என்றும் அரசாங்கம் தேவையற்ற இறக்குமதிகளுக்குத் தடை விதித்ததுடன், தேவையற்ற வெளிநாட்டு கடன்களை இடைநிறுத்தவும் தீர்மானித்தது எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

## முஸ்லிம் உடல் புதைப்புக்கு அமைச்சரவை அங்கீகாரமா? உண்மைக்குப் புறம்பான செய்தி என்கின்றார் கெஹலிய!

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்த முஸ்லிம் இனத்தவர்களின் உடலை புதைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. என தவறான செய்தி சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் நீதியமைச்சர் அமைச்சரவைக்கு முன்வைத்த யோசனையை சுகாதார குழுவினருக்கு வழங்கவே அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டது. என அமைச்சரவை பேச்சாளர் கெஹலியரம்புக்வெல குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்–

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் நாட்டில் முதலாவதாக இறந்தவரின் உடலைத் தகனம் செய்வதா, அல்லது புதைப்பதா என்ற விடயம் சுகாதார தரப்பினரால் அதிகம் ஆராயப்பட்டது.

எமது நாட்டின் பௌதீக மற்றும் பொது காரணிகளை அடிப்படையாகக் கொண்டு கொவிட் – 19



வைரஸ் தாக்கத்தால் இறப்பவர்களின் உடலை தகனம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் இறக்கும் முஸ்லிம் இனத்தவர்களின் உடலைத் தகனம் செய்வது தொடர்பில் பல்வேறு தரப்பினரும் மாறுபட்ட கருத்தைத் தெரிவித்தார்கள்.

இந்த விடயம் நாடாளுமன்றத்திலும், அமைச்சரவை கூட்டத்திலும் பேசப்பட்டது. இவ்வாறான நிலையில் நீதியமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி இந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் அமைச்சரவை யோசனையை முன்வைத்தார்.

நடைமுறையில் உள்ள சட்டம், சுகாதார அறிவுறுத்தல்கள் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டும் கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் உடலை உலர்வலய பிரதேசத்தில் புதைக்க முடியுமா என்ற யோசனை மாத்திரம் முன்வைக்கப்பட்டது.

நீதியமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனையை கொவிட் – 19 வைரஸ் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் சுகாதார குழுவினரின் பரிசீலனைக்கு வழங்க மாத்திரமே அமைச்சரவை அனுமதி வழங்கியது. என்பதை தெளிவாக குறிப்பிட வேண்டும்.

இந்த தீர்மானம் சமூகவலைத் தளங்களில் திரிவுபடுத்தப்பட்ட வகையில் வெளியாகியுள்ளன. – என்றார்.

## கொரோனாவினால் பாதிக்கப்பட்ட தாய் அச்சமின்றி குழந்தைக்கு பாலூட்டலாம்!

*கொழும்பு, நவ.13*

*நாட்டில் பரவிவரும் கொரோனா தொற்றானது வயது, பால் வேறுபா டின்றி சகலருக்கும் ஏற்பட்டுவரும் தொற்று நோயாக மாறி வருகிறது.*

*இந்நிலையில், தாய்பாலூட்டும் தாயொருவர் கொரோனா தொற்றுக்குள்ளாகும் நிலையில், அந்தத் தாய், எவ்வித அச்சமும் இன்றி குழந்தைக்கு தொடர்ந்தும் பாலூட்டலாம் என சுகாதார அமைச்சின் போசாக்கு பிரிவு தெரிவித்துள்ளது.*

*இந்த விடயத்தை வைத்தியர் லக்மினி மெகொடரத்ன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.*

காலைக்கதிர் Kalaikkathir

# கொரோனாவைக் கட்டுப்படுத்த 7 ஆயிரம் கோடி ரூபா செலவாம்!

## நாடாளுமன்றில் பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.13

நாட்டில் இரண்டாம் அலையாகப் பரவியுள்ள கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தச் செய்வதற்கு பாரிய முயற்சிகளை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாகவும், தொற்று நோயாளிகளை அடையாளம் காணல், தனிமைப்படுத்தல், பரிசோதனைகள் மற்றும் இவை சார்ந்த சேம நலன் நடவடிக்கைகளுக்காக இதுவரை அரசாங்கம் 7 ஆயிரம் கோடி ரூபா அளவில் செலவிட்டுள்ளதாகவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று 2020 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலத்தைச் சமர்பித்து உரையாற்றும் போதே பிரதமர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நிதி அமைச்சர் என்ற வகையில் நான் இந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தை சமர்ப்பிப்பது இது 11 ஆவது தடவையாக இருக்கின்ற போதிலும், இதுவரை இந்த நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்டங்களிலும் பார்க்க இது வேறுபட்டுக் காணப்படுகின்றது.

ஏனெனில், இது நான்கு இடைக்கால வாக்குப்பதிவுக்கணக்குகளைஉள்ளடக்கிய ஒதுக்கீட்டுச் சட்டமாகவும், இதனுடன் தொடர்புபட்டதாக எமது அரசாங்கத்தின் அரச நிதி முகாமைத்துவம் தொடர்பான கணக்கு அறிக்கையொன்றாகவும் இந்த ஒதுக்கீட்டுச் சட்டம் இருக்கின்றது.

ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ தெரிவான போது, அப்போதிருந்த அரசாங்கம் 2020 ஆம் வருடத்துக்காக ஒதுக்கீட்டுச் சட்டமொன்றை சமர்ப்பித்திருக்கவில்லை.

தேர்தலின் பின்னர் அதனைச் சமர்ப்பிக்கும் எதிர்பார்ப்புடன் இடைக்கால வாக்குப் பதிவுக் கணக்கொன்று நிறைவேற்றப்பட்டிருந்தது.

ஜனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து அப்போதைய அரசாங்கம் இராஜினாமா செய்தமையை அடுத்து நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டிராத நாம் நாடாளுமன்றத் தேர்தலொன்றைஎதிர்பார்த்தவண்ணம்அரசாங்கமொன்றை அமைத்து, இடைக்கால வாக்குப் பதிவுக் கணக்குக்கு ஏற்ப வரவு – செலவுகளை முகாமை செய்தோம்.

2020 மார்ச் மாதம் 02 ஆம் திகதி நாடாளுமன்ற தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதையடுத்து அரசமைப்பின் 150 உறுப்புரையின் பிரகாரம் ஜூன் – ஒகஸ்ட் காலப்பகுதிக்காக இடைக்கால வாக்குப் பதிவுக் கணக்கொன்றை நிறைவேற்ற ஜனாதிபதி அங்கீகாரம் வழங்கினார்.

எனினும் நாட்டில் நிலவிய கொரோனா தொற்றுநோய் பரவலைக் கவனத்திற் கொண்டு தேர்தல் ஒகஸ்ட் மாதம் வரை பிற்போடப்பட்டது. இதனால் ஜனாதிபதியால் ஜூலை – செப்ரெம்பர் காலப்பகுதிக்காக மீண்டுமொருதடவை இடைக்கால வாக்குப் பதிவுக் கணக்கொன்று அங்கீகரிக்கப்பட்டது.

இடைக்கால வாக்குப்பதிவுக் கணக்குகளுக்குரிய காலப்பகுதியில் 2020 வருடத்துக்கானஒதுக்கீட்டுச்சட்டமொன்றை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிப்பதற்கு போதிய காலம் இல்லாதிருந்ததால், 2020 ஒகஸ்ட் மாதம் நிதி அமைச்சர் என்ற வகையில் செப்ரெம்பர் மாதம் தொடக்கம் நான்குமாத காலப்பகுதிக்காக என்னால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வாக்குப் பதிவுக் கணக்குக்கு சபை அங்கீகாரம் வழங்கியது. அதற்கமைய, 2020 வருடத்தில் 04 இடைக்கால வாக்குப் பதிவுக் கணக்குகளின் மூலம் அரசாங்க நிதி முகாமை செய்யப்பட்டுள்ளது.

எமது நாட்டினதும் எமது அரசாங்கத்தினதும் விசேட அம்சம் யாதெனில், இலவச சுகாதார மற்றும் சமூக சேமநலனை அடிப்படைக் கொள்கையாக ஏற்றுக் கொண்டுள்ளமையாகும். அதேபோல் கடந்த ஆட்சியைபோல் அல்லாது நாட்டைக் கட்டியெழுப்பும் 'சுபீட்சத்தின் நோக்கு' என்ற அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தினுள் எமது அரசாங்கம் சந்தை வரையறைகளை இனங்கண்டு அரச துறையில் பரந்த அளவில் பணிகளை நிறைவேற்றுவதற்கு அர்ப்பணித்துள்ள அரசாங்கமொன்றாக செயற்பட்டு வருகின்றது.



எதிர்பாராத இரண்டாவது கொரோனா அலையின் பாதிப்புகளையும் தாங்கிய வண்ணம், உயிர் இழப்புகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்த போதிலும் எம்மைக் காட்டிலும் முன்னணியிலுள்ள பெரும்பாலான நாடுகளுடன் ஒப்பிடும் போது இறப்பு வீதம் 0.3 சதவீதம் என்ற ஆகக் குறைந்த மட்டத்தில் பேணி, நோய் ஒழிப்பிலும் தனிமைப்படுத்தல் தொழிற்பாட்டிலும் எமக்கு முன்னணியில் திகழ்வதற்கு முடிந்திருப்பது இதன் காரணமாகவே ஆகும். இதற்குப் பிரதான காரணம், எமது நாட்டில் சகல பிரதேசங்களிலும் அமுல் செய்யப்படுகின்ற இலவச சுகாதார முறைமையும், சுகாதார சேவையும் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

மேலும் நோயாளிகளை அடையாளம் காணல், தனிமைப்படுத்தல், பரிசோதனைகள் மற்றும் இவை சார்ந்த சேம நலன் நடவடிக்கைகளுக்காக இதுவரை அரசாங்கம் செலவிட்டுள்ள தொகை சுமார் 7 ஆயிரம் கோடி ரூபாவாகும். நோய் நிவாரண பணிகளுக்காக கொழும்புக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருந்த வைத்தியசாலை கொள்ளளவை ஒரு வருடத்துக்கும் குறைந்த காலப்பகுதியில் நாட்டின் பல்வேறு பிரதேசங்களும் உட்படுமாறு 17 வைத்தியசாலைகள் வரை அதிகரிக்கப்பட்டுள்ளன.

நோய் பீடித்தவர்களுக்கு விசேட சிகிச்சைகளை அளிப்பதற்கான கட்டில்களின் எண்ணிக்கை சுமார் 600 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. நோய் பரிசோதனைக்கான பி.சி.ஆர். கொள்ளளவை நாளொன்றுக்கு 7 ஆயிரத்து 500 இலிருந்து 10 ஆயிரம் வரை அதிகரிப்பதற்கு முடிந்துள்ளதுடன், இங்கு ஒரு பி.சி.ஆர். பரிசோதனைக்கான செலவு ரூபா 6 ஆயிரம் என்ற வகையில் ஒரு நாளுக்கான செலவு 5 கோடி ரூபாவைத் தாண்டுகின்றது. 14 நாள் நோய் நிவாரணத்துக்கு உட்படுத்தப்படுகின்றவர்களின் உணவு மற்றும் சேமநலன் நடவடிக்கைகளுக்காகவும் அரசு பெருந் தொகைப் பணத்தைச் செலவு செய்கின்றது. இதனிடையே கொரோனா தொற்று நோய் காரணமாக வருமானம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூபா 5 ஆயிரம் கொடுப்பனவும் வழங்கப்படுகின்றது.

இந்தச் செலவுகளுக்கு மேலதிகமாக, இந்தச் சேவைகளில் ஈடுபடும் அரச ஊழியர்களின் கொடுப்பனவுகளுக்காகவும், பிற செலவினங்களுக்காகவும் செலவு செய்வதற்கும் அரசுக்கு நேர்ந்துள்ளது. அதே போன்று, எமது நாட்டின் ஏற்றுமதி, சுற்றுலா மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு போன்ற துறைகளிலும் இந்த நிலைமை மோசமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது, வெளிநாட்டு வருமானம், தொழில் வாய்ப்பு, வாழ்வாதாரங்கள், தனியார் தொழில் முயற்சிகள் மற்றும் அரசாங்க வருமானம் போன்றவற்றில் மட்டுமல்லாது மக்களின் சமய, சமூக வாழ்விலும் பாரிய அழுத்தத்தைக் கொடுத்துள்ளது.

எமது பொருளாதாரமும் நிதி நிலைமையும் மிக மோசமானதாகவே உள்ளது. 2014 இல் இருந்த எனது அரசாங்கம் தேசிய வருமானத்தில் 5.7 சதவீதத்துக்கு குறைக்கப்பட்டிருந்த வரவு – செலவுத் திட்டப் பற்றாக்குறைக்குப் பதிலாக, எமக்கு 2019 இல் 9.6 சதவீத வரவு – செலவுத் திட்டப் பற்றாக்குறையுடனேயே எம்மீது சுமத்தப்பட்டது. இது 2005 ஆம் வருடத்தில் நான் அரசைப் பொறுப்பேற்கும் போது காணப்பட்ட 7 சதவீத பற்றாக்குறையைக் காட்டிலும் அதிகமாகும். 2015 ஆம் வருடத்துக்காக நான் 2014 இல் முன்வைத்த வரவு – செலவுத்திட்டத்தில் பிரதான நோக்கமாக இருந்தது யாதெனில், 2020 ஆம் வருடமாகும் போது வரவு – செலவுத் திட்டப்பற்றாக்குறையை 4 சதவீதத்துக்குக் குறைக்கும் அதேவேளை, எமது நாட்டை வறுமையற்ற உயர் வருமானம் பெறும் நாடாக மாற்றுவதாகும். – என்றார்.

---

## கழிவுப் பொருள்களை அகற்ற புதிய வழிகாட்டல் ஆலோசனை

கொரோனா நோய்த் தொற்று நிலைமையின் போது நபர்களால் பயன்படுத்தப்படும் முகக்கவசம் உள்ளிட்ட கழிவு பொருள்களை அகற்றுவது தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் வழிகாட்டல் ஆலோசனைகள் வெளியிடப்பட்டுள்ளன.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள வீடுகள் உள்ள பிரதேசங்களுக்கும் மற்றும் பொதுவாக அனைத்து பிரதேசங்களுக்கும் ஏற்ற வகையில் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இந்த வழிகாட்டல் ஆலோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் பிரதேசங்களில் சிகிச்சை கழிவு பொருள்களை அகற்றுவதற்கு உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்கள், ஊழியர்களைப் பயன்படுத்த வேண்டும்.

கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்கள் பயன்படுத்தும் முகக்கவசம் உள்ளிட்ட கழிவுப் பொருள்களை அகற்றுவதற்கு மஞ்சள் நிற பைகளைப் பயன்படுத்த வேண்டும்.

இந்தப் பொதிகளில் போடப்படும் கழிவுப் பொருள்கள் எந்த வகையிலும் மீள்சுழற்சி செய்யப்படாமல் முறையாக அழிக்கப்பட வேண்டும்.

நோய்த் தொற்றைத் தடுப்பதற்காகப் பொது மக்கள் பயன்படுத்தும் பொருள்களை அகற்றும் பொழுது சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்பட வேண்டும் என்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் இந்த ஆலோசனை வழிகாட்டியில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

---

## கொரோனாவிலிருந்து 470 பேர் குணடைவு!

கொழும்பு, நவ.13

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 470 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று (வியாழக்கிழமை) வீடுகளுக்கு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களில் 10 ஆயிரத்து 653 பேர் இதுவரை பூரணமாகக் குணமடைந்துள்ளனர்.

நாட்டில் இதுவரையில் 15 ஆயிரத்து 350 பேருக்கு கொரோனா வைரஸ் உறுதிசெய்யப்பட்டுள்ளது. அவர்களில் 10 ஆயிரத்து 653 பேர் குணமடைந்துள்ளனர்.

இந்த நிலையில், தொற்றுக்கு உள்ளான 4 ஆயிரத்து 651 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான 46 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## கொழும்பில் 24 மணித்தியாலத்தில் 264 கொரோனாத் தொற்றாளர்கள்!

நாட்டில் 24 மணித்தியாலங்களுக்குள் பதிவான 635 புதிய கொரோனா நோயாளர்களில் அதிகளவானோர் கொழும்பு மாவட்டத்திலேயே அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி கொழும்பில் நேற்று முன்தினம் மாத்திரம் 264 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேநேரம் கம்பஹா மாவட்டத்தில் 136 பேரும் களுத்துறையில் 18 பேரும் இரத்தினபுரியில் 9 பேரும் புத்தளத்திலிருந்து நால்வரும் புதிய கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

அதேபோல கண்டியிலிருந்து 25 பேரும் மாத்தறையிலிருந்து ஐவரும் காலியிலிருந்து 3 பேரும் அம்பாந்தோட்டையிலிருந்து இருவரும் புதிய கொரோனா நோயாளர்களுள் அடங்குகின்றனர்.

இதேநேரம், நுவரெலியா, இரத்தினபுரி, அம்பாறை, பதுளை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவரும் புதிய கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

---

## கோழி இறைச்சி விற்க வீடுகளுக்கு இனி தடை!

### யாழ்.மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில்

யாழ்ப்பாணம்மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து வீடுகளில் கோழி இறைச்சி விற்கத் தடை என நேற்றுத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபையின் மாதாந்த கூட்டம் முதல்வர் இமானுவேல் ஆனோல்ட் தலைமையில் ஆரம்பமாகி இடம்பெற்ற போது, இந்த விடயம் தொடர்பில் பரிசீலிக்கப்பட்டது. இறுதியில் முதல்வர் இந்த அறிவிப்பை வெளியிட்டிருந்தார்.

இந்தத் தடையை மீறி விற்பனையில் ஈடுபடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் யாழ்ப்பாணம் மாநகர சபையில் சாரதிகள் மற்றும் மாநகர சபை உத்தியோகத்தர்கள் பலர் தவறான நடவடிக்கையில் ஈடுபட்டமைக்கான விசாரணைகள் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டதுடன் அதற்கான பதிலை ஆணையாளர் வழங்கியிருந்தார்.

# ஒல்லாந்தர் இடித்த கோயில்

ஈழத்துச் சிதம்பர யாத்திரை 02

... வே.வரதசுந்தரம் ...



காரைநகர் யாத்திரை வந்த அடியார்கள், சில பண்டைய மரபுகள் இத்தலத்தில் இன்றும் பேணப்படுவது கண்டு வியப்புறுகின்றனர். இம்மரபுகளைப் பாருங்கள்:-

* உப்பின்றி இறைவற்கு நிவேதனம் படைக்கின்றனர்.
* ஏடு தொடக்கம், அரங்கேற்றம் போன்ற நிகழ்வுகள் முதலில் ஐயனார் கோயில் வாயிலில் இடம்பெறுகின்றன.
* கோயில் நைவேத்தியத்துக்கு எடுக்கும் அரிசி கையால் உரலில் குற்றியதாக இருத்தல் வேண்டும்.
* அபிடேகத்துக்குக் வழங்கப்படும் பால் செம்பு, வெள்ளிப்பாத்திரங்களில் கொண்டுவரப்படல் வேண்டும்.
* ஆலய நித்திய பூசைக்கும், அர்ச்சனைக்கும் உரிய பூக்கள், வில்வங்களை அடியார்கள் செப்புக் கூடையில் அல்லது தென்னோலையால் இழைக்கப்பட்ட கூடையில் கொண்டுவரல்.
* அபிடேகத்துக்குப்பாவிக்கும்நல்லெண்ணை உரலில் எள்ளைத் துவைத்துப் பிழிந்து எடுத்ததாக இருத்தல்.
* விபூதி ஊரவர்களால் கொண்டுவரப்பட்டு, நீரில் கழுவிக் காயவைத்துப் பாவித்தல்.

இத்தலத்தில் உள்ள ஐயனார் கோயிலின் பழைய வரலாற்றினைச் சிவாச்சாரியார் வைத்தீஸ்வரக் குருக்கள் கூறுவதைப் பார்ப்போம்:-

*'சோழ தேசத்தில் இருந்திங்கு வந்த குளக்கோட்டு மன்னனால் காரைநகரில் வியாவில் என்னும் பகுதியில் ஐயனார் கோயில் அமைக்கப்பட்டது. இதுவே காரைநகரில் சோழர் காலச் சிற்பமுறைப்படி முதன் முறையாக அமைக்கப்பட்ட கோயிலாகும்.*

*குளக்கோட்டு மன்னன் திருவுத்தரகோசமங்கையில் இருந்து மங்களேஸ்வரக் குருக்களையும், சுந்தரேஸ்வரக் குருக்களையும் அழைப்பித்து ஐயனார் கோயில் கும்பாபிடேகத்தை நடத்துவித்தான் என்பதும், அதனோடு அமையாது செப்புத் தகட்டில் சாசனம் ஒன்றையும் எழுதிக் கொடுத்து அவர்களையே அருச்சகர்காளாக நியமித்தான் என்பதும் வரலாறு.'*

போர்த்துக்கேயர் தமது ஆட்சிக்காலத்தில் இக்கோயிலை இடிக்கப் பல தடவைகள் முயன்றபோதும் அவை கைகூடவில்லை. அதன் பின்னர் ஒல்லாந்தர் ஊர்காவற்துறையைக் கைப்பற்றிய ஒருமாத காலத்துள் இக் கோயிலை இடித்தனர்.


ஐயனார் கோயில்

ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்தில் சைவமக்கள் அனுபவித்த அல்லல்கள் சொல்லுந்தரமன்று. இவற்றை ஈழத்துச் சிதம்பர புராணம் எடுத்துக் கூறும். சைவர்கள் அனுபவித்த கொடுமைகளைக் கேட்டு உள்ளம், உதிரம் துடிக்கும்.

**திருநீறு பூசுவதும் குற்றங் குற்றஞ்**
**சிவபூசை காணாமல் செய்தால் குற்றம்**
**அருமைந்தர் தமக்கரனா ரருளி நாமம்**
**அமைப்பதுவும் வழங்குவதும் அந்தோ குற்றம்**
**திருக்கோயில் பூசனையில் செய்தல் குற்றம்**
**சீர்விரதங் கொள்ளுவதும் தீராக்குற்றம்**
**பொருவறுசீர் சைவருக்கு ஒல்லாந்தர் செய்த**
**புன்மைகளை அம்மம்மா சொல்லப் போமோ!**

*'ஒல்லாந்தர் ஆட்சியின் பின்னர் ஆங்கிலேயர் ஆட்சியில் 1770ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆண்டிக்கேணி ஐயனார் கோயில் அமைக்கப்பட்டது என்பதே இவ்வூரார் மத்தியில் வழங்கும் வரலாறு ஆகும்'.*

இதனை அறிந்து கொண்டு சிவனடியார்கள், அங்குள்ள ஐயனார் கோயிலில் வழிபாடியற்றுவர்.

ஐயன் என்றால் தலைவன் என்று பொருள். ஆல்விகுதி சேர்த்து ஐயனார் என்றழைப்பர். சிவனுக்கும், திருமாலுக்கும் புத்திரனாகத் தோன்றிய ஹரிஹர புத்திரரே ஐயனார் ஆவார். ஐயனார் காத்தல் கடவுள் என்பர். ஊரவருடனான உரையாடலைத் தொடர்ந்து, ஐயனார் கோயில் புக்கு வழிபாடு இயற்றுவர்.

ஐயனார் பூரணைதேவி, புஷ்பகலாதேவி சமேத வடிவினர். அவரதுமேனி கருங்கடல் போன்று இருண்டது. சடையோ செவ்வானம். செண்டாயுதம் தாங்கிய திருக்கரம். சின்முத்திரையுடன் கூடியது வலக்கரம். முழங்காலின்மீது நீட்டிய இடக்கரம். குந்தி அமர்ந்த கோலம். இதுவே ஐயனாரின் வடிவம்.

ஐயனாரின் இடப்புறத்தே அம்பிகை புட்கலை இருப்பள். அவளதுமேனி கரியது. இடதுகாலைத் தொங்கவிட்டு, வலதுகாலை மடக்கியிருப்பள். அவளது வலக்கரத்தில் மலர். இடக்கரத்தில் வரதமுத்திரை.

ஐயனாரின் வலப்புறத்து அம்பிகை பூரணை இருப்பள். பொன்னிறம் அவள் மேனி. இடக்கரத்தில் குவளைமலர். வலக்கரத்தைத் தொங்கவிட்டு இருப்பாள். இவ்வினிய காட்சியை விளக்கும் பாடல் பாரீர்:-

**பூரணை புட்கலைத் தாயர் பொருந்தி இருபால் அமர**
**ஆரணமுதலெம் சாத்தன் அழகிய செண்டுகை யேந்தி**
**பேரெழிற் குதிரை அமர்ந்தே பேசும் அடியார் தங்கள்**
**நேரினிற் போந்தே நின்று நிறைய அருளும் தருவான்.**

சிவனார், உமையாள், திருமால் ஆகிய மூவரின் அம்சமும் பொருந்திய வடிவமே ஐயனார் ஆகும். காத்தற் கடவுளான ஐயனாருக்குக் குதிரை ஊர்தியாகிறது. கோழிக் கொடியோனாக ஐயனார் காட்சி தருகிறார். அவன் அடியவர்களுக்கு வரங்களை வாரி, வாரி வழங்குவான்.

**வெள்ளை வாரணம் ஏறி விளங்குந் திருக்கரத்தே**
**உள்ளுசீர்ச் செண்டுந் தாங்கி உண்மை அடியார் தம்பால்**
**கொள்ளும் பெரிதாம் அன்பால் கொட்டிக் கொடுப்பாய் வரங்கள்**
**ஐயா அற்புத மூர்த்தி ஆண்டிக் கேணியாய் போற்றி!**

**(தொடரும்...)**

## தொற்றா நோயாளர்களுக்கு கொரோனா ஏற்பட்டால் 10 ஆண்டுகள் ஆயுள் குறையும்!

### சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.13

தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டால் அவர்களின் ஆயுள் காலத்தில் 10 வருடங்கள் குறையக் கூடும் என சுகாதார அமைச்சின் ஊடக பேச்சாளர் வைத்தியர் ஜயருவன் பண்டார தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், இதயம் சம்பந்தமான நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் கொரோனா தொற்றுக்கு உள்ளானால் அவர்களின் ஆயுள்காலம் 10 வருடங்கள் குறையக்கூடும் என அவர் எச்சரித்துள்ளார்.

அதற்கமைய 60 வயது கடந்தவர்கள் கொரோனா தொற்றால் உயிரிழப்பதற்கான அதிக வாய்ப்புகள் உள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்கள் வீடுகளில் உயிரிழப்பதற்குக் கவனக்குறைவே முக்கிய காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தொற்றுக்குள்ளாகும் 10 ஆயிரம் பேரில் 28 பேர் உயிரிழக்கும் அபாய நிலைமை!

நாட்டில் கொரோனாத் தொற்றுக் குள்ளாகும் 10 ஆயிரம் பேரில் 28 பேர் உயிரிழக்கும் அபாயம் காணப்படுவதாக தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் பெரும்பாலான உயிரிழப்புகள் முதுமை மற்றும் நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டதன் காரணமாகவே ஏற்படுவதாக தொற்று நோய் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனா இரண்டாவது அலை ஆரம்பித்ததில் இருந்து 40 நாள்களுக்குள் சுமார் 30 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அண்மையில் இடம்பெற்ற கொரோனா உயிரிழப்புகளை மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை இன்னும் ஒரு வார காலத்துக்குள் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை தொற்றுக்கு உள்ளானவர்களில் அதிகமானவர்கள் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இரட்டைப் படுகொலை வழக்கில்

# பிள்ளையான் கட்சியின் செயலர் பிரசாந்தன் இன்று காலை கைது!

*23ஆம் திகதி வரை விளக்கமறியல்*

கொழும்பு, நவ.12

பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான பூபாலபிள்ளை பிரசாந்தன் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இன்று காலை கைதுசெய் யப்பட்டார்.

அவரை எதிர்வரும் 23ஆம் திகதி வரையில் வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.சி.றிஸ்வான் உத்தரவிட்டார்.

ஆரையம்பதியிலுள்ள தனது வீட்டில் வைத்து பிரசாந்தன் கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த குற்றப் புலனாய்வு பிரிவு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார்.

ஆரையம்பதியில் 2008 ஆம் ஆண்டு இடம்பெற்ற இரட்டைப் படு கொலை தொடர்பில், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த அவர், பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் அது தொடர்பான வழக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நடைபெற்று வருகின்றது.

இந்தநிலையில், வழக்கின் சாட்சியங் களை அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டு தொடர்பில் 2019 ஆம் ஆண்டு மே மாதம் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அது தொடர் பில் சட்டமா அதிபர் திணைக் களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த நிலையில் இன்று இந்தக் கைது இடம் பெற்றுள்ளது.



இவ்வாறு கைதுசெய்யப்பட்ட பிரசாந்தன், மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.சி.றிஸ்வான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 23 திகதிவரை விளக்கமறியல் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# சிறுமி மீது துஷ்பிரயோகம்: 5 வருடக் கடூழியச் சிறை!

திருகோணமலை, நவ. 12

திருகோணமலை - சீனக்குடா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 9 வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றவாளிக்கு 5 வருடக் கடூழியச் சிறை தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் இந்தத் தீர்ப்பினை நேற்று திறந்த நீதிமன்றில் வாசித்துக் காட்டி தீர்ப்பளித்தார்.

2012 ஆம் ஆண்டு சீனக்குடா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் ரயில் நிலைய விடுதியில் வசித்து வந்த 9 வயது சிறுமி, அருகில் உள்ள வீட்டுக்கு காற்ற டிக்கும் பம் கொடுக்கச் சென்ற நிலையில் காணாமல் போயுள்ளார். பிள்ளை வீட டுக்கு திரும்பி வரவில்லை என அவரது தந்தை தேடிச் சென்றுள்ளார். அப்போது பாழடைந்த வீட்டுக்குள் வைத்து தனது நண்பர் மூலம் பாலியல் துஷ்பிரயோகம் இடம்பெற்றுள்ளதாக வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில் 9 வயது சிறுமியை பாலியல் குற்றம் செய்தமை தொடர்பில் திருகோணமலை மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் 2 குற்றச்சாட்டுக்களிலும் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டதையடுத்து மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதில் 2 குற்றச்சாட்டுகளுக்கும் ஐந்து வருட கடூழிய சிறை தண்டனை விதிக்குமாறும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஒரு லட்சம் ரூபாய் நஷ்டஈடு செலுத்துமாறும் செலுத்தத் தவறும் பட்சத்தில் ஒரு வருடக் கடூழிய சிறை தண்டனை அனுபவிக்குமாறும் நீதிபதி கட்டளையிட்டார். இதே வேளை அரச செலவாக பத்தாயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்துமாறும் அப்பணத்தை செலுத்தத் தவறும் பட்சத்தில் இரண்டு மாத கால கடூழிய சிறை தண்டனை வழங்குமாறும் மேலும் கட்டளையிடப்பட்டது.

# கேரளக் கஞ்சாவுடன் இளைஞர் சிக்கினார்

யாழ்ப்பாணம், நவ. 12


யாழ். வடமராட்சி, இன்பர்சிட்டிப் பகுதியில் கேரளக் கஞ்சா கடத்தலில் ஈடுபட்ட 20 வயது இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அத்துடன் அவரிடமிருந்து ஒரு தொகை கேரளக் கஞ்சா மற்றும் பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன

கஞ்சா கடத்த முயற்சி தொடர்பில் கிடைத்த தகவலுக்கு அமைவாக காங்கேசன் துறை விசேட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின்போதே குறித்த இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை, இன்பர்சிட்டி பகுதியில் வைத்து நேற்று மாலை 5.30 மணியளவில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனவும், அவரிடமிருந்து 3 கிலோ 335 கிராம் கேரளக் கஞ்சா, ஒரு தொகைப் பணம் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் விசேட குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே இந்தக் கஞ்சா கடத்தல் முறியடிக்கப்பட்டது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்

# கனரக வாகனங்கள் மோதின மாங்குளம் பகுதியில் விபத்து



முல்லைத்தீவு, நவ.12

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஏ- 9 வீதியின் பனிக்கன்குளம் 232 ஆவது கிலோமீற்றருக்கும் 233ஆவது கிலோமீற்றருக்கும் இடைப்பட்ட பகுதியில் பாரிய விபத்து ஒன்று நேற்றிரவு இடம்பெற்றுள்ளது.

இதன்போது தெய்வா தீனமாக யாருக்கும் உயிர் சேதங்கள் இடம்பெறவில்லை.

வவுனியா நோக்கி பெக்கோ இயந்திரத்தை ஏற்றி வந்த வாகனம் ஒன்றின் சில்லு காற்று போன காரணத்தினால் வீதி யோரத்தில் அது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் வவுனியாவை நோக்கி வந்த இன்னுமொரு கென்டெயினர் பாரவூர்தி, நின்றுகொண்டிருந்த வாகனத்துடன் மோதுண்டதில் இந்த அனர்த்தம் இடம் பெற்றுள்ளது.

இந்த வாகனங்கள் கடுமையாக மோதுண்டு சேதமடைந்துள்ள போதும் தெய்வாதீனமாக உயிர் சேதங்கள் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என அறியமுடிகிறது. மாங்குளம் பொலிஸார் சம்பவஇடத்திற்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# நண்பர்களின் வீட்டுக்கு வந்து திரும்பியவர் விபத்தில் சாவு!

மட்டக்களப்பு, நவ.12

மட்டக்களப்பு மாவட்டம், வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 35ஆம் கிராம வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று இடம்பெற்ற இவ்விபத்தில், கடொல் மிஸ்திரிகே கமல் வர்ண தேப்பிரிய (வயது - 35) என்பவரே உயிரிழந்துள்ளார்.

தனது இருப்பிடமான ரஜகரதென்ன பிரதேசத்திலிருந்து தனது நண்பர்களின் வீட்டுக்கு வந்துவிட்டு திரும்பிச் சென்று கொண்டிருந்தபோது, மோட்டார் சைக் கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் வெட்டப்பட்டுக்கிடந்த மரத்துடன் மோதியதில் இவ்விபத்து சம்பவித்துள்ளது.

களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்ற நீதவானின் உத்தரவுக்கமைய சம்பவ இடத்துக்குச் சென்ற களுவாஞ்சிக்குடி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார், சடலத்தைப் பார்வையிட்டமையுடன், அதன் பின்னர் இடம்பெற்ற பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது

சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை வெல்லாவெளிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்து சிறுவன் பரிதாப உயிரிழப்பு

## கிளிநொச்சியில் சோகம்

**(ந.லோகதயாளன்)**

கிளிநொச்சி, நவ. 12

தற்காலிக வீட்டுச் சுவர் இடிந்து விழுந்த தில் 8 வயதுச் சிறுவன் பலியான சம்பவம் கிளிநொச்சியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த சில நாட்களாகப் பெய்த பலத்த மழை காரணமாக குறித்த பகுதியில் வெள்ள நீர் தேங்கியுள்ளது.

இதன் காரணமாக தற்காலிக வீட்டின் சுவர் ஈரமடைந்து இன்று காலை விழுந்ததில் குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொண்டமான் நகர் பகுதியில் குறித்த சம்பவம் இன்று முற்பகல் 11 மணியளவில் பதிவாகியுள்ளது.

தாயார் உணவு தயாரித்துக்கொண்டிருந்தபோது உயிரிழந்த சிறுவன் உணவருந்திக் கொண்டிருந்துள்ளார். இதன் போது திடீரென சுவர் இடிந்து விழுந்ததில் இடிபாட்டுக்குள் சிக்கிய சிறுவன் அயலவர்களின் உதவியுடன் மீட்கப்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார்.

எனினும், வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி குறித்த சிறுவன் உயிரிழந்துள்ளார்.

தொண்டமான்நகர் பகுதியைச் சேர்ந்த நிரோஜன் ரிஷாந்தன் (வயது - 07) என்ற சிறுவனே சாவடைந்துள்ளார்.



உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

குறித்த பகுதியில் வெள்ள நீர் தேங்குவது தொடர்பான பல்வேறு தரப்பினரின் கவனத்துக்குக் கொண்டு சென்றும் எவ்வித தீர்வும் எட்டப்படவில்லை எனப் பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். இதனால் வருடம் தோறும் 40 குடும்பங்கள் வரை பாதிக்கப்படுகின்றன எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கரைச்சி பிரதேச சபையால் குறித்த வடிகாலமைப்பு வசதியை ஏற்படுத்தித் தருமாறு பலமுறை கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால், இதுவரை தீர்வு எட்டப்படாத நிலையில் இன்று ஒரு சிறுவனின் உயிர்பிரிந்துள்ளது என மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, சஜித் பிரேமதாஸவால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்தின் மிகுதிப் பணம் வழங்கப்படாமையாலேயே நிரந்தர வீட்டுக்குள் செல்ல முடியாது போயுள்ளது எனவும், அவர்களுக்கான நிரந்தர வீடு அமைக்க மிகுதிப் பணத்தை உடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# முஸ்லிம் உடல் தகனம் செய்யும் விவகாரம் மீண்டும் இஸ்லாமிய அடிப்படை வாதமாகும்!

## எச்சரிக்கின்றார் ஞானசார தேரர்



கொவிட்-19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழக்கும் முஸ்லிம் இனத்தவர்களின் உடலை தகனம் செய்வதை பிரதான மாக கொண்டு இஸ்லாமிய அடிப்படை வாதம் மீண்டும் தலைத்தூக்கியுள்ளது. பௌத்தர்கள் உரிமைகளை கோரினால் பாரிய நெருக்கடி ஏற்படும் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

பொதுபல சேனா அமைப்பின் காரியா லயத்தில் கடந்த செவ்வாய்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத் துரைக்கையிலேயே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழக்கும் முஸ்லிம் தரப்பினரது உடல்களை எரிப்பதா, புதைப்பதா என்பது தற்போதைய பிரதான பேசுபொருளாக உள்ளது.

முஸ்லிம்களின் உடலை எரிக்க வேண்டாம் என இஸ்லாமிய அடிப்படை வாதிகள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வந்தார்கள்.

இஸ்லாமிய அடிப்படைவாதத்தை ஒழிப்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்த ராஜபக்ஷர்களின் அரசாங்கம் தற்போது அடிப்படைவாதிகளின் ஆலோசனைகளுக்கு அடிபணிந்துள்ளதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

2005 - 2015 வரையிலான காலப் பகுதியில் இஸ்லாமிய அடிப்படைவாதம் தலைதூக்கியது. இதனை நாங்கள் பகி ரங்கப்படுத்திய போது எங்களை இன வாதிகள் என்று விமர்சித்தார்கள்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலுடன் நாட்டில் இஸ்லாமிய அடிப்படைவாதம் எந்தளவிற்கு பலம் பெற்றுள்ளது என்பது. வெளிப்பட்டது.

இஸ்லாமிய அடிப்படைவாதம் தொடர் பாக ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர் பில் ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் பல விடயங்கள் பகிரங்கப்படுத்தப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் இஸ்லாமிய அடிப்படைவாதத்தை முற்றாக ஒழிப்பதை விடுத்து அவர்களின் கோரிக்கைக்கு சார்பாகச் செயற்படுகின்றமை பெரும் பான்மை மக்கள் வழங்கிய ஆணைக்கு முரணானது.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்வது முஸ்லிம் சமயக் கோட் பாட்டுக்கு முரணானது என குறிப்பிடுகி றார்கள்.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழக்கும் பௌத்தர்கள், இந்துக்கள் மற்றும் கத்தோலிக்க சமயத்தவர்களின் உடல்கள் தகனம் செய்யப்படுகின்றன. இதன் போது மத சம்பிரதாய சடங்குகள் செயற்படுத்தப்படுவதில்லை. இதற்கு பௌத்தர்கள் போர்க் கொடிதூக்கவில்லை. நாட்டின் பாதுகாப்பு தொடர்பாக மாத்தி ரமே கவனம் செலுத்தப்பட்டது.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழப்பவர்களின் உடலைத் தகனம் செய்ய சுகாதாரத் தரப்பினர் ஆரம்பத்தில் எடுத்த தீர்மானத்துக்கு ஏதுவான கார ணிகளை நாட்டு மக்களுக்கு சுகாதார தரப்பினர் பொறுப்புடன் பகிரங்கப்படுத்த வேண்டும்.

கொவிட் - 19 வைரஸ் தொடர்பில் இராணுவத் தளபதி, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மற்றும் சுகாதார தரப்பினர் என அவரவர் மாறுப்பட்ட கருத்துக்களை குறிப்பிடுகிறார்கள். எவர் குறிப்பிடு வதை ஏற்றுக் கொள்வது என்ற குழப்பம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது ஆகவே எடுக்கும் தீர்மானத்தை ஒருவர் அறிவிக்க வேண்டும். - என்றார்.

# ஒரு லட்சம் வேலை வாய்ப்பில் மட்டக்களப்பில் பாரிய ஊழல்!

## கருணா வெளிப்படுத்தும் அம்பலம்

சிறந்த முறையில் திட்டமிடப்பட்டிருந்த ஒரு லட்சம் வேலைத் திட்டத்தில் மட்டக்களப்பில் பாரிய முறைகேடு கள் நடைபெற்றுள்ளன என தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) குறிப்பிட்டுள்ளார்.

அம்பாறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் நேற்று முன்தினம் (புதன்கிழமை) கலந்துகொண்டு உரையாற் றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்:-

மக்களுக்காகத் தொடர்ந்து உழைக்க வேண்டும். தேர்தலுக்காக நாம் மக்களை ஏமாற்றக் கூடாது.

எனக்குக் கிடைத்த அதிகாரம் மிக்க பதவி ஊடாக மக்களுக்கு உதவி செய்வேன். இதற்கு கொரோனா நோய் தற்போது தடையாக உள்ளது. இந்த நோய் கார ணமாக அமைச்சுக்கள் செயலிழந்துள்ளன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பானது தோல்வியடைந்த கலையரசன் என்பவருக்கு அம்பாறையில் பதவியைக் (தேசியப் பட்டியல்) கொடுத்துள்ளது.

அவர் வாகனத்தில் பவனி வருகின்றார். அவர் ஏதா வது ஒரு வேலைத்திட்டத்தை அம்பாறையில் செய்தால் நான் திரும்பிச்சென்றிருப்பேன். ஆனால் அவர் ஒன்றுமே செய்யப்போவதில்லை. மக்களை ஏமாற்றவும் இருப்பைத் தக்க வைக்கவுமே அவர்கள் முயல் கின்றனர்.

இதேவேளை, எங்கள் அம்பாறை மாவட்ட மக்களை



எமது இதயத்தில் இருந்து பிரிக்க முடியாது. நானும் கைவிட்டுப் போகமாட்டேன்.

அம்பாறை மாவட்ட மக்களை அபிவிருத்தியின்பால் இட்டுச்செல்ல சகல அரசியல் கட்சிகளும் இணைய வேண்டும். இதனை ஓர் இனவாதமாக எவரும் பார்க்கக் கூடாது. இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒத்து ழைப்பு வழங்க வேண்டும்.

இதேவேளை, சிறந்த முறையில் திட்டமிடப்பட்டி ருந்த ஒரு லட்சம் வேலைத் திட்டத்தில் மட்டக்களப்பில் பாரிய முறைகேடுகள் நடைபெற்றுள்ளன.

இந்த விடயத்தை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளேன். இந்த விடயத்துக்குத் தீர் வைப் பெற்றுத்தருவேன்.- எனத் தெரிவித்துள்ளார்.

# ஊழியர்களின் பி.சி.ஆர். அறிக்கையின் அடிப்படையில் பேலியகொட மீளத் திறப்பு!

## கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

ஊழியர்களின் இறுதி பி.சி.ஆர். அறிக்கையின் அடிப்படையிலே பேலியகொடை மீன் சந்தையை மீண்டும் திறப்பதற்கான திகதி நிர்ணயிக்கப்படும் என கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜே சேகர தெரிவித்தார்.

பேலியகொட மீன்சந்தையில் பணிபுரியும் ஊழி யர்களில் பலருக்கு கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்டமையையடுத்து, அந்த மீன்சந்தையை தற்காலிகமாக மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த விடயம் தொடர்பாகக் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித் தார்.



இதன்போது தொடர்ந் தும் கருத்துத் தெரிவித்த அவர் -

பேலியகொடை மொத்த மீன் சந்தை தொகுதியில் கொரோ னாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டமை யைத் தொடர்ந்து, கடந்த மாதம் இறுதியில் மீன் சந்தையை தற்காலிகமாக மூடிவிடத் தீர்மானித் தோம்.

மக்களின் சுகாதாரப் பாதுகாப்புத் தொடர்பாகக் கருத்திற்கொண்டு, அங்கு ஊழியர்களிடம் பெற்றுக் கொள்ளப்படும் இறுதி பி.சி.ஆர். அறிக்கையின் அடிப் படையிலே, மீன் சந்தையை மீண்டும் திறப்பதற்கான திகதி நிர்ணயிக்கப்படும்.

அத்துடன் மீன் சந்தை திறக்கப்படும்போது ஆரம் பமாக மொத்த வியாபாரிகளுக்கு மாத்திரம் திறக்கப் படும். பின்னர் சுகாதார வழிகாட்டல் மற்றும் சட்டத் தின் பிரகாரம் சில்லறை வியாபாரத்துக்கு முறையான வேலைத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்க திட்டமிட்டிருக்கின் றோம். - என அவர் மேலும் தெரிவித்தார்.

# விவசாயிகளின் உற்பத்திகள் வீண்விரயமாக்கப்படமாட்டா!

## பசில் உத்தரவாதம்



விவசாயிகளின் உற்பத்திகள் பயன் பெறாத வகை யில் வீண்விரயமாவதற்கு அரசு ஒரு போதும் இடமளிக் காது. மெனிங் பொதுச்சந்தைக்கு பதிலாக பேலியகொட பகுதியில் புதிய பொதுச்சந்தை நிர்மாணிக்கப்படும் என பொருளாதார புத்தாக்கம் மற்றும் வறுமை ஒழிப்பு ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக் கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

மெனிங் மொத்த விற்பனை மத்திய நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டதால் விவசாயிகள் பெரும். நெருக்கடியை எதிர் கொண்டுள்ளார்கள். விவசாயிக ளின் மரகறி உற்பத்திகளை விற்பனை செய்து கொள் வதற்கு பேலியகொட பகுதியில் புதிதாக விற்பனை மத்திய நிலையத்தை அமைக்க அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்த மான காணியில் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி விரைவாக விற்பனை மத்திய நிலையத்தை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மெனிங் மொத்த விற்பனை மத்திய நிலையம் மூடப் பட்டதால் விவசாயிகள் பாரிய நெருக்கடியை எதிர்க் கொண்டுள்ளார்கள். ஒரு நாளைக்கு மாத்திரம் 150 தொடக்கம் 200 வரையிலான லொறிகள் பல சிரமங் களுக்கு மத்தியில் பிற விற்பனை நிலையங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் மரக்கறிகளின் ஒரு கிலோவையேனும் பயன் பெறாத வகையில் வீண்விரய மாக அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது. விவசாயி களுக்கு நிவாரணம் வழங்கப்படும். - என்றார்.

# திருகோணமலை வைத்தியசாலையில் மேலும் ஒரு வைத்தியருக்குத் தொற்று!

திருகோணமலை வைத்தியசாலையில் மேலும் ஒரு வைத்தியர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளார் என வைத்தியசாலை அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள் ளனர்.

இவ்வாறு கொரோனா தொற்றுக்குள்ளானவர் முன் னர் கொரோனா தொற்றுக்குள்ளான வைத்தியருடன் தொடர்புகளைப் பேணியவர் எனத் தெரியவந்துள் ளது.

திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை அடை யாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 14 ஆகக் காணப்படுவதாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கூறியுள் ளார்.

# தொற்றா நோயால் பாதிக்கப்படுவோரை கொரோனாவிலிருந்து காப்பாற்றவேண்டும்

## ஜனாதிபதி அறிவுறுத்தல்



தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களை கொரோனா நோய்த்தொற்றில் இருந்து பாதுகாப்பதற்கு விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் தினமும் சந்திக்கும் கொரோனா விசேட செயலணியுடனான சந்திப்பு நேற்று முன்தினம் (புதன்கிழமை) இடம்பெற்றது. இதன்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஏனைய நாடுகளைப் போன்று எமது நாட்டிலும் பதிவாகியுள்ள கொரோனா மரணங்களின் எண்ணிக்கையில் 93 வீதமானவற்றுக்கு காரணம் தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பதாகும் என வைத்தியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறிப்பாக இருதய நோய், நீரிழிவு, சிறுநீரக நோய் மற்றும் புற்றுநோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் மிக வேகமாக கொரோனா நோய்த்தொற்றுக்கு உள்ளாகின்றனர்.

பெரும்பாலானவர்கள் நோய் அறிகுறிகள் இன்றியே மரணத்தை தழுவியுள்ளனர். பின்னர் மேற்கொள்ளப்பட்ட பீசீஆர் பரிசோதனைகளின் போது அவர்கள் கொரோனா நோய்த்தொற்றுக்கு உள்ளாகியிருக்கின்றமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே இது தொடர்பாக விசேட கவனம் செலுத்தி தொற்றாத நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களைப் பாதுகாப்பதற்கும் கொரோனா நோய்த் தொற்றிலிருந்து விலகியிருப்பதற்கும் தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் உடனடியாக வழங்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேநேரம், நேற்றைய கூட்டத்தின்போது கொரோனாப் பரவல் மற்றும் அதனை கட்டுப்படுத்தல் தொடர்பான தற்போதைய நிலை தொடர்பாகவும் எதிர்காலத்தில் எழக்கூடிய வைரஸுடன் தொடர்புடைய நோய்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் மக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் ஆராயப்படவேண்டிய துறைகள் பற்றியும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

பிரதான வைத்தியசாலைகளுக்கு வருவதில் மக்கள் எதிர்கொள்ளும் கஷ்டங்களை இனம்கண்டு ஒரு காலத்தில் நாடுபூராகவும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதேச மருந்தகங்களை உடனடியாக செயற்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அதற்குத் தேவையான மருந்துவர்கள், தாதிகள் மற்றும் ஏனைய பணிக்குழாமினரை உடனடியாக நியமிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

## 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையர் நாடு திரும்பினர்!

### தினேஷ் தகவல்



மத்திய கிழக்கைச் சேர்ந்த 17 ஆயிரத்து 861 பேர் அடங்கலாக, 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் திருப்பி அழைத்து வரப்பட்டுள்ளனர் என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் புலம்பெயர்விற்கான வலைப்பின்னலை இலங்கையில் ஆரம்பித்து வைக்கும் நிகழ்ச்சியில் உரையாற்றியபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

கொரோனா தொற்றுநோய்ப் பரம்பலை அடுத்து, வெளிநாடுகளில்வேலைசெய்யும்இலங்கையர்களின் நலன்களை உறுதிப்படுத்த அரசாங்கம் துரித நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகக் கூறியுள்ளார்.

கொரோனா தொற்றுநோயின் முதலாம் அலை தாக்கிய சமயம், பிரத்தியேக இணையத்தளமொன்று ஆரம்பிக்கப்பட்டு, வெளிநாடுகளில் வேலை செய்யும் இலங்கையர்களின் தகவல்கள் திரட்டப்பட்டன.

தற்போது, வேலைக்காக வெளிநாடுகளில் தங்கியிருக்கும் இலங்கையர்களில் பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ளவர்களுக்கு உதவி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் விமானம் மூலம் உலருணவு நிவாரணங்களை அனுப்பி வைப்பதற்கும் தற்காலிக தங்குமிட வசதிகளை வழங்குவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜோர்தான், கட்டார் போன்ற நாடுகளில், கொரோனா நெருக்கடியால் வேலைவாய்ப்பு இழந்தவர்களுக்கு வேறு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இதன்போது மேலும் தெரிவித்துள்ளார்.

# 5 ஆயிரம் குளங்கள் அபிவிருத்தி திட்டத்தில் 87 குளங்கள் மட்டக்களப்பில் சீரமைப்பு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் எண்ணக் கருவில் 5 ஆயிரம் குளங்களைப் புனரமைக்கும் செயல்திட்டத்தை நாடு பூராகவும் நடைமுறைப்படுத்துவதற்கான முதலாவது கூட்டமும் விவசாய அபிவிருத்திக்குழுவின் விசேட கூட்டமும் நேற்று முன்தினம் (புதன்கிழமை) பிற்பகல் மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான கணபதிப்பிள்ளை கருணாகரன் தலைமையில் நடைபெற்றது.

சுபீட்சத்தை நோக்கிய கிராமிய பொருளாதாரத்தை அபிவிருத்தியூடாக நஞ்சற்ற உணவு உற்பத்தியை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் ஐந்து வருடங்களுக்கு மேலாக அபிவிருத்தி செய்யப்படாத குளங்கள் மற்றும் வாய்க்கால்கள், தூர்ந்து போன குளங்கள், அணைக்கட்டுகள் போன்றவற்றை அபிவிருத்திசெய்யும் திட்டம் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 17 கமநல சேவை நிலையங்களிலும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. ஒவ்வொரு கமநல சேவை நிலைய பிரிவுகளிலும் மூன்று முதல் ஐந்து குளங்கள் தெரிவு செய்யப்பட்டு எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கை முழுவதும் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த வேலைத்திட்டமானது ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்படமாட்டாது. மாறாக விவசாய அமைப்பினர், பொது மக்கள், நலன் விரும்பிகள், மாணவர்கள், தொண்டர்கள் மூலமாகவே இந்த வேலைத் திட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளன. மத்திய மாகாண அரசாங்கத்தின் கீழ்வருகின்ற 87 குளங்கள் மட்டக்களப்பில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

# ஹோட்டல்கள் பாதுகாப்புக்கு சான்றிதழ் வழங்க ஏற்பாடு!

கொழும்பு, நவ.13

நாட்டில் உள்ள 40 இற்கும் மேற்பட்ட சுற்றுலாத்துறையைச் சேர்ந்த ஹோட்டல்களுக்கு அடுத்த வாரம் பாதுகாப்புக்கான சான்றிதழை வழங்கவுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்று நிலைமைக்கு மத்தியில் தமது தொழிற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஆர்வமாகவுள்ள மற்றும் தமது அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்டுள்ள 40 இற்கும் மேற்பட்ட ஹோட்டல்களுக்கு இந்த சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

கொரோனா தொற்றுக்கு பின்னர் விடுமுறையைக் கழிப்பதற்காக இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு உத்தரவாதமளிக்கும் வகையில் தமது அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்டுள்ள அனைத்து நிறுவனங்களுக்கும் பாதுகாப்புக்கு உகந்தது என்பதை உறுதிப்படுத்தும் சான்றிதழை வழங்க அரசாங்கம் கடந்த ஜூன் மாதம் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாசகர்களினால் வவுனியாவில் நோய்த் தொற்று அபாயம்

வவுனியாவில் வெளிமாவட்ட யாசகம் பெறுவோரின் வருகையால் கொரோனா நோய் தொற்று அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

வவுனியா நகர்ப்பகுதியில் யாசகம் பெற்று வாழ்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. வெளி மாவட்டங்களில் இருந்து கைக்குழந்தைகளுடன் அதிகளவான யாசகம் பெறுவோரின் குடும்பங்கள் வருகை தந்து இருக்கின்றமை அவதானிக்க முடிகிறது.

வவுனியா பழைய பஸ் நிலையம், மற்றும் நகர் பகுதிகளில் சில இடங்களிலும், குடியிருப்பு குளத்தின் ஓரங்களிலும் குடும்பசகிதமாக வருகை தந்து எந்தவிதமான சுகாதார நடைமுறைகளையும் கடைப்பிடிக்காமல் தங்கி உள்ளனர். இதன் காரணத்தால் வெளி மாவட்டங்களில் இருந்து கொரோனா வைரஸின் காவிகளாக இவர்கள் செயற்படக் கூடிய சந்தர்ப்பம் அதிகமாக உள்ளது.

இதேவேளை ஆண், பெண், வித்தியாசமின்றி மது அருந்துதல், தகாத வார்த்தைகள் பேசுதல், சண்டை போடுதல் போன்ற விரும்பத்தகாத செயல்களிலும் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

## வெளிநாடுகளில் 98 இலங்கையர் கொரோனாவால் உயிரிழந்தனர்!

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக வெளிநாடுகளில் சுமார் 98 இலங்கையர்கள் இதுவரையில் உயிரிழந்துள்ளனர் என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அறிக்கை வெளியிட்டுள்ள வெளிவிவகார அமைச்சு, இதில் அதிகளவான மரணங்கள் சவுதி அரேபியாவில் பதிவாகியுள்ளன எனத் தெரிவித்துள்ளது.

அதற்கமைய இதுவரையில் சவுதி அரேபியாவில் மாத்திரம் 34 மரணங்கள் பதிவாகியுள்ளன எனவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும், ஐக்கிய அரபு அமீரகத்தில் 10 பேரும், கட்டாரில் 6 பேரும், ஓமானில் 4 பேரும், பஹ்ரைன் மற்றும் ஜோர்தான் ஆகிய நாடுகளில் தலா இருவரும் இஸ்ரேலில் ஓர் இலங்கையரும் உயிரிழந்துள்ளனர் எனக் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், பிரித்தானியாவில் வசித்து வந்த ஐந்து இலங்கையர்கள் கொரோனா வைரஸ் காரணமாக உயிரிழந்துள்ளமையோடு, அமெரிக்கா மற்றும் கனடாவில் தலா நான்கு உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

அதேநேரம், ஜேர்மன் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளில் தலா இரு உயிரிழப்புகள் பதிவாகியுள்ளமையுடன், ஈரானில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும் வெளிவிவகார அமைச்சின் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# யாழ். பல்கலை கலைப் பீட மாணவர் மோதல்; விரிவான விசாரணை அறிக்கை கையளிப்பு!

யாழ்ப்பாணம், நவ.13

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைப்பீட இரண்டாம் வருட மாணவர்களுக்கும், மூன்றாம் வருட மாணவர்களுக்குமிடையில் கடந்த மாதம் 08 ஆம் திகதி இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக விசாரணைககளை மேற்கொண்ட தனிநபர் ஆயத்தினால் 130 பக்கங்களைக் கொண்ட விரிவான விசாரணை அறிக்கை பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கென, பல்கலைக்கழகப் பேரவையினால் நியமிக்கப்பட்ட தனி நபர் விசாரணை ஆயத்தின் தலைவர் ஓய்வு நிலைப் பேராசிரியர் மா. நடராஜசுந்தரத்தினால் இந்த விரிவான விசாரணை அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த விரிவான அறிக்கை அடுத்த வாரம் இடம்பெறவுள்ள பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு, விசாரணை அறிக்கையின் உள்ளடக்கங்கள் தீவிரமாக ஆராயப்பட்டு, விசாரணை அதிகாரியினால் முன் மொழியப்பட்டுள்ள சிபார்சுகளின் அடிப்படையில் பேரவைக்கான பல்கலைக் கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையின் பரிந்துரை முன்வைக்கப்படும்.

பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையில், பல்கலைக்கழகத்தின் சகல பீடாதிபதிகளும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட இரண்டு பேரவை உறுப்பினர்களும், மாணவ ஆலோசகர் ஒருவரும், பிரதிச் சட்ட நிறைவேற்று அதிகாரி (புறொக்டர்) ஒருவரும், போதனைசார் விடுதிக் காப்பாளர்கள் இருவருமாக இருபது பேர் அங்கம் வகிப்பதுடன், பதிவாளரின் நியமனப் பிரதிநிதியாக மாணவர் நலச் சேவைகளுக்கான உதவிப்பதிவாளர் செயலாளராகவும் செயற்படுகின்றார்.

பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையின் பரிந்துரையின் அடிப்படையில் சம்பவம் தொடர்பாகப் பேரவையினால் இற்றைப்படுத்தப்படும் தீர்மானம் துணைவேந்தரால் நடைமுறைப்படுத்தப்படும் என பல்கலைக்கழகவட்டாரங்களில் இருந்து அறியவருகிறது.

கடந்த மாதம் கடந்த 8 ஆம் திகதி கலைப்பீடத்தின் இரண்டாம்,மூன்றாம் வருட மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட தகறாறு முற்றி மோதலாகியிருந்தது. அன்று மாலை வளாகத்தினுள் இடம்பெற்ற மோதலின் போது சமரசம் செய்ய முற்பட்ட பல்கலைக்கழகத் துணைவேந்தர் உட்பட அதிகாரிகளுடன் முரண்பட்டுக் கொண்ட மூன்றாம் வருட மாணவர்கள், துணைவேந்தர் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் தம்மைத் தாக்கினர் என ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தனர்.

எனினும், உடனடியாகவே மாணவர்கள் மத்தியில் பேசிய துணைவேந்தர், தான் உட்பட அனைவரையும் விசாரணை செய்யும் வகையில் சம்பவம் குறித்து விசாரிப்பதற்குச் சுயாதீன விசாரணைக்குழு ஒன்று பேரவையினால் அமைக்கப்படும் என்று வாக்குறுதி வழங்கியதை அடுத்து மாணவர்கள் அன்றிரவு கலைந்து சென்றிருந்தனர்.

மறுநாள் இ 9 ஆம் திகதி கூடிய பல்கலைக்கழகப் பேரவை, வணிக முகாமைத்துவ பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும், ஓய்வு நிலைப் பேராசிரியருமான மா. நடராஜசுந்தரத்தை விசாரணையாளராகக் கொண்டு தனிநபர் விசாரணை ஆயம் ஒன்றினை நியமித்திருந்தது.

தனிநபர் விசாரணை ஆயத்தின் விசாரணைகள் கடந்த 21ஆம் திகதி புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டது. தாக்குதல் சம்பவத்தின் போது அவ்விடத்தில் நின்ற பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், பாதுகாப்பு ஊழியர்களும் சாட்சியமளித்திருந்தனர். அதன் பின், சம்பவம் தொடர்பில் – சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட இரண்டாம் வருட, மூன்றாம் வருட மாணவர்கள் சாட்சியமளித்திருந்தனர். அதன் பினனர், துணைவேந்தர் மற்றும் கலைப்பீடாதிபதி ஆகியோரின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை விசாரணை அறிக்கை துணைவேந்தரிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது.

## குருநகரில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கட்டடங்களை அகற்றியது யாழ். மாநகர சபை




யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட குருநகர் பகுதியில் வடிகால்களுக்கு மேலாக சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்த வீடு மற்றும் கடைகள் நேற்று யாழ்ப்பாண நகர சபையால் அகற்றப்பட்டன.

குருநகர் பகுதியில் மாநகர சபையின் ஆளுகைக் குட்பட்ட வடிகாலுக்கு மேலாக சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட வீடுகள் மற்றும் கடைத் தொகுதிகளே ஜனாபதி செயலகத்தின் பரிந்துரைக்கு அமைய யாழ்ப்பாணம் பொலிஸாரின் பாதுகாப்புடன் நேற்று இடிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் குறித்த கட்டடங்கள் அனுமதியின்றி வடிகால்களுக்கு மேல் நீண்ட காலத்துக்கு முன்னர் அமைக்கப்பட்டிருந்தன. எனினும், கடந்த வருடத்திலிருந்து இதனை அப்புறப்படுத்துமாறு உரிமையாளர்களிடம் கோரிக்கை விடுத்தும் அப்புறப்படுத்தப்படாத நிலையில் நேற்று ஜனாதிபதி செயலகத்தின் அறிவுறுத்தலின்படி குறித்த கட்டடங்கள் யாழ். மாநகர சபையால் அகற்றப்பட்டுள்ளன.

மாநகர சபையால் பலவந்தமாக அகற்றப்பட்டமை தொடர்பில் அப்பகுதி மக்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்கள்.

கட்டடத்தை இடிப்பது தொடர்பில் எமக்கு முன்கூட்டியே அறிவுறுத்தல் வழங்கப்படவில்லை. இது அராஜகமான செயல் என்று அப்பகுதி மக்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்கள்.

# அதிகூடிய கடன்கள் பெற்ற வருடம் இவ்வருடமே இதனாலே மக்கள் 'கோத்தா பைல்' என்கின்றனர்!



## ஹபீர் ஹாசிம் எம்.பி. கிண்டல்

இலங்கை வரலாற்றில் இந்த வருடமே அதிகூடிய கடன் பெறப்பட்டிருக்கின்றது. ஆனால் நாங்கள் 100 நாள்களில் செய்த வேலைத்திட்டங்களைக்கூட 365 நாள்களாகியும் அரசாங்கத்துக்கு செய்ய முடியாமல் போயிருக்கின்றது. அதனால் தான் மக்கள் 'கோத்தா பைல்' எனத் தெரிவிக்கின்றனர் என எதிர்க்கட்சி உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2020ஆம் வருடத்துக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

வரலாற்றில் முதல் தடவையாகவே ஒரு வருடத்தில் இரண்டு வரவு – செலவுத் திட்டங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. அரசாங்கம் கடந்த வருடம் நவம்பர் மாதம் ஆட்சி பொறுப்புக்கு வந்து, அமைச்சரவையையும் ஏற்படுத்தி இருந்தது.

ஆனால் இந்த அரசாங்கத்துக்கு 2020ஆம் ஆண்டுக்கான வரவு–செலவு திட்டம் ஒன்றைத் தயாரித்து சமர்ப்பித்துக்கொள்ள முடியாமல் போயிருக்கின்றது.

ஆனால் 2015 இல் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தில் நாங்கள் பெரும்பான்மை இல்லாத நிலையில் 100 நாள்களில் வரவு – செலவுத் திட்டம் ஒன்றை முன்வைத்து மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களுக்கான விலைகளைக் குறைத்தோம். அரச ஊழியர்களுக்கு 10ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை மேற்கொண்டோம்.

எரிவாயு, பெற்றோல் விலைகளைக் குறைத்து மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக்கொடுத்தோம். ஆனால், அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 365 நாள்களாகியும் என்ன செய்தது என்று முடியுமானால் தெரிவிக்க வேண்டும். குறைந்த பட்சம் வரவு – செலவு திட்டத்தையேனும் சமர்ப்பிக்க முடியாமல்போயிருக்கின்றது. அதனால் தான் மக்கள் 'கோத்தா பைல்' எனத் தெரிவிக்கின்றனர்.

மேலும் எந்தவோர் அரசாங்கமும் அந்த நிதியாண்டுக்குரிய செலவை ஆண்டின் ஆரம்பத்தில் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பித்து, அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும். ஆனால் பிரதமர் இந்த வருடத்துக்கு அரசாங்கத்தால் செலவழிக்கப்பட்ட நிதிக்கு அனுமதியை தருமாறே கேட்கின்றார்.

அதேபோல் இந்த வருவருடத்துக்கான இரண்டு இடைக்கால கணக்கறிக்கைகளுக்கு நாடாளுமன்றத்தில் அனுமதி கிடைக்கப்பெற்றது.

அதில் ஜனவரி முதல் ஏப்ரல் 31வரையும் செப்ரெம்பர் முதல் டிசெம்பர் 31 வரையுமாகும். ஆனால் அதற்கு இடைப்பட்ட மே மாதம் முதல் ஓகஸ்ட் 21 வரையான காலத்துக்கு அரசாங்கத்தால் செலவழிக்கப்பட்ட நிதிக்கு நாடாளுமன்றத்தில் அனுமதி பெறப்படவில்லை. அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு அந்த அதிகாரம் இல்லை. அப்படியானால் அந்த காலப்பகுதியில் அரசாங்கத்தால் செலவிடப்பட்டது சட்டவிரோதமாகும்.

அத்துடன் அதிகாரத்தில் இருக்கும் அரசாங்கம் செலவுகளுக்காகக் கடன் பெற்றுக்கொள்ளும்போது அதற்கான அனுமதியை நாடாளுமன்றத்திடம் கேட்கவேண்டும். இந்த வருடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு இடைக்கால கணக்கறிக்கைகளின் மூலம் 2 ஆயிரம் பில்லியன் ரூபா கடன் பெற்றுக்கொள்ள நாடாளுமன்ற அனுமதி வழங்கி இருந்தது.

ஆனால் இடைப்பட்ட காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடனுக்கு யார் அனுமதி வழங்கியது என நாங்கள் கேட்கின்றோம். இந்த வருடத்தில் அரசாங்கம் பெற்றுக் கொண்ட கடன் காரணமாக நாட்டின் மொத்த கடன் தொகைக்கு 2ஆயிரத்து 650 பில்லியன் ரூபா அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. நாடு சுதந்திரமடைந்து வரலாற்றில் ஒரு வருடத்தில் அதிகூடிய கடன் பெற்ற வருடமாக 2020 வருடம் வரலாற்றில் எழுதப்படுகின்றது என அவர் இதன் போது தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது

## தமிழ்த் தேசியக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசியக் கட்சி – 02, தமிழ்த் தேசிய மக்கள் முன்னனி – 01, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் – 01, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி – 01 என 17 உறுப்பினர்கள் உள்ளனர்.

இதில், ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஆகியவற்றின் ஆதரவுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (07 உறுப்பினர்கள் ஆதரவுடன்) ஆட்சியமைத்திருந்தது.

இந்தநிலையில், 2021ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு நேற்று நடைபெற்றது.

இதன்போது தமிழ்த் தேசியக் கட்சிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பான ஈ.பி.ஆர்.எல்.எவ்.,தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பன ஒன்று சேர்ந்து – 9 உறுப்பினர்கள் இணைந்து வரவு – செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்து அதைத் தோல்விடையச் செய்தனர்.

வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 7 உறுப்பினர்களும், எதிராக 9 உறுப்பினர்களும் வாக்களித்தனர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் நேற்று சபைக்கு சமுகமளிக்கவில்லை.

## ஜனாஸாக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைவர் ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது தெரிவித்தார்.

இந்த விவகாரம் நாட்டின் முஸ்லிம் சமூகத்தினருக்குப் பெரும் சுமையாக மாறியுள்ளது எனவும் அவர் கவலை வெளியிட்டார்.

நாடாளுமன்றம் இதற்கு உரிய தீர்வை முன்வைக்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

முஸ்லிம் சமூகத்தின் வேண்டுகோள்களைப் புறக்கணித்து சுகாதார அமைச்சு விஞ்ஞான ரீதியில் நிரூபிக்கப்படாத ஆதாரங்களின் அடிப்படையில் பல கருத்துக்களை முன்வைத்து வருகின்றது எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இறந்தவர்களின் உடல்களை புதைப்பது என்பது முஸ்லிம் மக்களின் மதநம்பிக்கையின் முக்கியமான பகுதி எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

காலைக்கதிர் Kalaikkathir

# பயங்கரவாதப் பட்டியலில் புலிகளை நீக்கக் கூடாது!

## பிரித்தானியாவுக்கு இந்தியா வலியுறுத்தல்

கொழும்பு, நவ.13

பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை நீக்கக் கூடாது என பிரித்தானியாவிடம் இந்தியா வேண்டு கோள் விடுத்துள்ளதாக இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2000 ஆம் ஆண்டளவில் பிரித்தானியா தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இணைத்தது.

யுத்தம் முடிவுக்கு வந்து 10 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் இலங்கையில் எந்தவிதமான வன்முறைகளும் இடம்பெறாதமையையடுத்தும் புலிகள் அமைப்பின் தடையை நீக்க வேண்டும் என்று கோரப்பட்டது.

இந்த நிலையில் புலிகள் மீதான தடையை பிரித்தானியா நீக்கவுள்ளதாக அண்மையில் செய்திகள் வெளியாகின. இதற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சும் தனது கண்டனத்தை வெளியிட்டிருந்தது.

இவ்வாறான சூழலில் புலிகள் மீதான தடையை பிரித்தானியா நீக்கக் கூடாதென இந்தியா, பிரித்தானிய உள்துறை அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மெனிக் சந்தை பணியாளர் அனைவருக்கும் பி.சி.ஆர்.!



கொழும்பு மெனிங் மொத்த வர்த்தக சந்தையை அண்மித்த பகுதியில் உள்ள அனைவரும் பி.சி.ஆர்.பரிசோதனையின் மூலம் வைரஸ் தொற்று இல்லை என்பதை உறுதி செய்ய வேண்டும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொழும்பு மெனிங் மொத்த வர்த்தக சந்தையை மீண்டும் திறப்பது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில், மெனிங் சந்தையில் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் சிற்றூழியர்கள் வரை அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொள்கின்றமை முக்கியமானது என்று தெரிவித்தார்.

கொழும்புக்கு அப்பால் பேலியகொடையில் தற்காலிகமாக மெனிங் மொத்த வர்த்தக சந்தையை ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப் பட்டுள்ளது.

கொழும்பு மெனிங் மொத்த வர்த்தக சந்தையில் கடமையாற்றும் ஊழியர்கள் மற்றும் சிற்றூழியர்கள் இதில் கலந்துக்கொள்ள முடியும். இருப்பினும்பி.சி.ஆர்.பரிசோதனையின் மூலம் இவர்களுக்கு வைரஸ் தொற்று இல்லை என்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள உள்ளவர்களுக்கு அதற்கான பெயர்பட்டியலை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். கொழும்பு மத்திய பிரதேச பொலிஸ் அதிகாரியுடன் தொடர்பு கொண்டால் இதற்கான ஆலோசனை மற்றும் வழிமுறைகளைத் தெரிவிப்பார் என்றும் குறிப்பிட்டார்.

நிஷாந்த தர்மசேகர என்ற அதிகாரியை 0718591551 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகத் தொடர்பு கொண்டு விவரங்களை வழங்க முடியும் என்றும் பொலிஸ் ஊடக பேச்சாளரும், பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண மேலும் தெரிவித்துள்ளார்.

# 5 ஆயிரம் லீற்றர் சட்ட விரோதக் கசிப்பு தீபாவளிக்குத் தயார் நிலையில் சிக்கியது!

## நாவலப்பிட்டியில் மூவர் கைது



நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெட்டபுலா ஹூனுகொட்ட பகுதியில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சட்ட விரோதமான முறையில் தயாரிக்கப்பட்ட 5 ஆயிரம் லீற்றர் கசிப்புடன் மூன்று பேர் ஹற்றன் கலால் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு குறித்த கசிப்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாகவும் ஒரு போத்தல் கசிப்பு 1200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட இருந்ததாகவும் கலால் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளன.

ஹற்றன் கலால் திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலினையடுத்தே நேற்று (வியாழக்கிழமை) இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சந்தேக நபர்களிடமிருந்து கசிப்பு 5 ஆயிரத்து 100 லீற்றர், கசிப்பு தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் ஆகியன அதன் போது மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் ஹூனுகொட்டுவ பகுதியை சேர்ந்தவர்கள் என்றும் இவர்கள் பிணையில் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் தினங்களில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கலால் திணைக்கள அதிகார் ஒருவர் தெரிவித்தார்.

## 51 இலங்கையர் நாடு திரும்பினர்

கொரோனா வைரஸ் பரவல் அச்சம் காரணமாக மத்திய கிழக்கின் இரு நாடுகளிலிருந்து 51 இலங்கையர்கள் நேற்று (வியாழக்கிழமை) அதிகாலை நாட்டை வந்தடைந்துள்ளனர்.

அதன்படி கட்டார், டோஹாவிருந்து 31 இலங்கையர்கள் நேற்று காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

மேலும் தொழில் வாய்ப்புக்காக ஓமானுக்குச் சென்ற 20 இலங்கையர்கள் நேற்று காலை மஸ்கட்டிலிருந்து ஓமான் எயார்லைன்ஸ் விமான நிறுவனத்துக்கு சொந்தமான விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அவர்களைத் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## இலங்கையின் முதலாவது ட்ரோன் படையணி ஆரம்பம்!

இலங்கை இராணுவத்தில் ட்ரோன் படையணி ஒன்று ஆரம்பிக்கவுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நிலத்தை கண்காணிக்கும் விடயத்தில், இந்த ட்ரோன் படையணியின் ஒத்துழைப்பை இராணுவத்தினர் பெற்றுக்கொள்வர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தை நிறைவு செய்த நாடு என்ற ரீதியில், நாட்டில் ஏற்படும் அனர்த்த நிலைமைகளைக் கண்காணிப்பதற்காகவும் எதிர்காலத்தில் தேசத்தைப் பாதுகாப்பதற்காகவும் இந்த ட்ரோன் படையணியின் ஒத்துழைப்பைப் பெற எதிர்பார்த்துள்ளதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

அத்துடன் இராணுவத்தினரை சகல விடயங்களிலும் பலப்படுத்துவது அவசியம் என்பதுடன், அதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. - என்றார்.


கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1987.06.02 | பிறந்த திகதி - 1996.05.05 |
| மதம் - இந்து K | மதம் - இந்து K |
| நட்சத்திரம் - ஆயிலியம் | நட்சத்திரம் - அனுசம் |
| பாவம் - 19 1/4 | பாவம் - 9 1/4 |
| செவ்/சூரி - 7இல் | செவ்/ சூரி - 9இல் |
| கல்வி - MBBS | கல்வி - AL |
| தொழில் - Doctor | எதிர்பார்ப்பு - வெளிநாடு |
| எதிர்பார்ப்பு - UK - Doctor மணமகள் தேவை. | |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள். முகநூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம், சந்தை வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

ஊழியர்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஆடைத் தொழிற்சாலை ஒன்றிற்கு தையலாளர்கள், உதவியாளர்கள் தேவை
தொடர்புகளுக்கு:- 077 7114 848
applicationagi@outlook.com

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1025/=Kg
•பிரான்ஸ் •ஜெர்மனி •டென்மார்க் •நெதர்லாந்து •இத்தாலி •சுவிஸ்
1150/= Kg

0768226240


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.11.2020 இல் வெளியிடப்பெற்றது.

# கொரோனாவுக்குப் பின்னரான உலகம்
# இயற்கைக்கான தருணம்

## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை 1-30, 2020



## ஆளுக்கொரு மரம் நடுவோம்
## நாளுக்கொரு வரம் பெறுவோம்

கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

விளம்பர அனுசரணை:- காலைக்கதிர் Kalaikkathir